கடவுள் கொடுத்தவரம் கிடைக்கவில்லை
எமக்கு – கடவுளே கிடைத்தர் வரமாக – அம்மா –





வீரப் பெண்மணி அமரர்

திருமதி நாகசுந்தரி கார்த்திகேசு

அவர்களின்

# சுந்தரி தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை
கடவுளே கிடைத்தார் வரமாக அம்மா...



சைவவேளான் குலதிலகரும் இருமரபு தூய தனிநாயக முதலியார்
வழித் தோன்றலும் நெடுந்தீவு கிழக்குப்பதி மாவலித்துறை தம்போர்
வளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்

அமரர் வீரப் பெண்மணி

# திருமதி நாகசுந்தரி (செல்லம்) கார்த்திகேசு

அவர்களின்

## சிவன் பாதம் கலந்த

# நினைவு மலர்

**18.10.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எம்மை வளர்த்து ஆளாக்கி
வாழவைத்த தாய்க்கும் தந்
தைக்கும் இன் நூல் சமர்ப்பணம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
07.05.1938

மறைவு
22.04.2023

அமரர்

# திருமதி நாகசுந்தரி கார்த்திகேசு

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

வையத்தோர் வாழ்த்தி ஏந்தும் சோபகிருது வருடம்
சித்திரைத் திங்கள் அபரபக்க துதியைத திதியில்
இறைவனடி சேர்ந்த நாகசுந்தரி நிலையில்லா
வாழ்வகற்றி நிலைத்திடு வாழ்வு தேடிய நாளாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## நேரிசை வெண்பா

நோயுற் றுழலாமல் நொந்து வருந்தாமல்
பாயுற்று பண்பு சிதறாமல் - வேயுற்ற
தோழி னவன் பாகம் தோய்ந்த சிவன்மைந்தன்
கணபதி தாள் போய்ச் சேர்ந்தாள் கலங்க வைத்து.

## தேற்றம்

பக்குவமாய் வாழ்ந்தாள், பலரையும் வாழவைத்து
வித்தகமாய் பேசி வினயங்கள் தான் புரிந்து
நொடிப் பொழுதில் பறந்து சென்றனளே விண்ணில்
அற்புதம் மீதோ யாரு மிறப்பதும் உண்மை கண்டீர்.

## தேவாரம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற் புகலித்திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
 ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
 குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனைவதைத்தமுக மொன்றே
 வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
 ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனக்கின்ற இதயத்தின் வலிகளோடு

**திருமதி நாகசுந்தரி கார்த்திகேசு**

அவர்களின்

# ஜீவிதப் பதிவுகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்

ஈழமணித்திரு நாட்டிலே உலகம் போற்றி மகிழ்ந்திடும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடபாலுள்ள சப்த தீவுகளில் ஒன்றாகி நீண்ட கடல் தாண்டி கடலன்னை தாலாட்டிடவே மகிழ்வும் ஒற்றுமையாய் மக்கள் வாழுகின்ற சொர்க்கபுரி நெடுந்தீவு என்றே மகிழ்வு கொள்வோர் திக்கெட்டும் வாழுகின்ற மக்கள் அனைவருமே.

நீண்ட நெடுந்தீவிற்கோ பல்வேறு பெயர்களைக் கற்று உணர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மூலிகைத்தீவு, பசுந்தீவு, வந்தோரை வரவேற்கும் பண்புடைதீவு, ஒழுக்கத்திலும் கல்வியிலும் உயர்ந்ததீவு பல்வேறு மதங்களும் ஒன்றாக உறவாடும் மகிமை கொண்ட தீவு அதர்மத்தை அழித்து நீதிக்காய் உயிர் கொடுக்கும் வீர மறவர் வாழும் தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவின் மாவிலித் துறை வாழ் போற்றிப் புகழ்ந்திடும் "தம்போர்" குடும்பம் அதில் பேராளன் இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் நற்றவப் பேற்றால் சீரும் சிறப்புடன் வாழும் காலை இறைவன் திருவருளுடன் நாகம்மா என்னும் மகளைப்பெற்றெடுத்து மகிழ்வோடு வாழும் வேளை இறைவன் திருவருள் கை கூடியே நாகம்மாவுடன் ஒரு ஆண் மகனையும் ஆறு பெண் தங்கைகளையும் பெற்றெடுத்து இனிய குடும்பமாய் உற்றாரும் மற்றோரும் போற்றுகின்ற இனிய குடும்பமாய் இராமலிங்கம் அன்னப்பிள்ளை குடும்பம் திகழ்ந்தது.

தங்களின் பிள்ளைகள் அனைவற்கும் திருமணப் பருவம் எய்தவே ஏற்ற நல்வாழ்வை அமைத்துக் கொடுத்த நிலையில் நாகசுந்தரிக்கு திருமண வயது எய்தவே தங்களின் உறவு முறையான கணபதிப் பிள்ளை வள்ளியம்மையின் ஒரே மகனான சிறந்த ஒழுக்க சீலரும் சமுக சேவையாளரும் நெடுந்தீவு கிழக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்து வீரருமாகிய கார்த்திகேசு அவர்களுக்கு திருமணம் முடித்து வைத்தனர்.

இல்வாழ்வின் அருந்தவப் பயனாய் இரண்டு ஆண்மகனில் மூத்தவன் செல்வன் என பெயர் சூட்டி செல்லக் குழந்தையு டன் வாழும் காலை இரண்டாவது மகனாக ஆண் குழந்தை தங்களின் யோகத்தின் குழந்தை எனக்கருதி யோகு எனப் பெயர் சூட்டி வாழ்வு மகிழ்ச்சியாக உருண்டு ஓடியது.

இரண்டு ஆண் மக்களும் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர்கள் தந்தை கார்த்திகேசு 1985ஆம் ஆண்டு குமுதினிப் படு கொலையில் கொலையர்களுடன் சண்டையிட்டு கொலை செய்யப்பட்டார். இந்த சோக நிகழ்வை தாங்கமுடியாமல் சோர்ந்து நின்ற வேளை அடுத்த துன்பியல் நிகழ்வாக இளையமகன் யோகு நாட்டு நிலைமை காரணமாக காணாமல் ஆக்கப்பட்டார்.

மூத்த மகன் செல்வன் சொந்த மாமன் கந்தையா விதானையாரின் மகளாகிய யோகியை திருமணம் செய்து இல்லறத்தின் நந்தவனத்தால் இரண்டு பிள்ளைகள் ஆகிய கார்த்திகன், கபிலன் உடன் இன்புற்றே இனிதாய் வாழும் வேளை காற்றுப்பறந்தது பின்னால் செய்தி ஒலித்தது. தலைவாசல் வீடாகிய தம்போர் வீட்டின் நான்கு சகோதரிகளும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகனும் உறவினர் ஒருவருமாய் அறுவர் கொலையும் ஒருவனால் கொலை செய்யப்பட்ட செய்தி காற்றாய் பறந்து யாழ்ப்பாணம் வந்தோம். வீரம் செறிந்த மண்ணில் இத்துணை சோக நிகழ்வா சட்டத்தின் முன் கைகட்டி நிற்கும் நிலை எம் வீரத்திற்கு ஏற்பட்டதை நினைத்து வருந்து கின்றோம்.

வந்தோரை வரவேற்று உணவளிக்கும் நாகசுந்தரி (செல்லக்கா) யிற்கும் சகோதரிகளிற்கும் இப்படி ஒரு கொடுமையா? யாரிடம் முறை யிடுவோம் என்றாலும் தலைவாசல் வீடாகிய தம்போர் வீடு எல்லோர் மனங்களிலும் என்றென்று வாழ் வார்கள் என்பதுடன் அமரர் நாக சுந்தரியின் கரங்கள் இறை சந்நிதானத்தில் இருந்து எமக்கு வரம் அருள வேண்டும் என இறைஞ்சி நிற்கின்றோம்.

நன்றி

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
17.07.1934

தாயார் நாகரத்தினம்

மறைவு
22.04.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்ல அம்மா எனை விட்டு போனதெங்கே?

பெற்றெடுத்தா ஓர் அன்னை
வளர்த்தெடுத்தா சிற்றன்னை அன்னையாக
சான்றோரும் எமைச் சார்ந்தோரும்
போற்றிட தரணியிலே
பெயருடனும் புகழுடனும் வாழ வைத்த
என் அம்மா செல்லம்மா
வானுலகம் செல்வதற்கு
வஞ்சகனின் ஆய்தம் உமை இப்
பூவுலகில் வாழ விடாதது ஏன்? அன்னையே
உமைப்பிரிந்து ஏக்கமுடன்
கண்ணீரால் குளிக்கிறேன்.

நீ இருந்த காலமெலாம் என்
நெஞ்சம் இனித்ததுவே
பேருலக வாழ்வின் இன்பத்தை
எனக்களித்த அன்னையே
வேறுலகம் சென்றதனால்
விடியவில்லை நாட்களெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரூன்றி விழுந்தெழும்பி நான்
காலூன்றி நடக்க பாதைகளைப்
படைத்த என அன்னை
பார் போற்றும் நன் மகனாய் வாழ
பகல் இரவாய் ஒளி தந்தாய்
வாழ்ந்தது போதுமென
அப்பாவைக் காண விரைந்து போனீர்களோ?

காலமெல்லாம் ஒளி விளக்காய் எனக்கு
வெளிச்சமாய் இருந்த என அன்னையே
முதுமையிலும் முடங்காது
இளமை என நீ நினைத்து
அன்னமிட்டு அரவணைத்த உங்கள்
கைகள் எங்கள்
செல்லமாக நீ எனக்கு செல்வன் என
பெயர் சூட்டி
செல்ல அம்மா செல்லம் எனை
தவிக்க விட்டு எங்கு சென்றீர்
ஆறாது என் நெஞ்சில் இத்துயரம்
உன் பிரிவை ஏற்க மறுக்கிறது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**செல்வன் (மகன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிலே என்றும் நிலைத்திருக்கும் என் செல்லமாமி

கண்களில் கருணை கொண்டீர்
கருணையில் அமுதம் தந்தீர்
பண்பினில் உயர்ந்தீர் என்றும்
பார் போற்றும் பெண்மணியாம்
என் மாமி
தனிமையில் இருந்த போதும்
தனித்து நின்று உபசரித்து
ஊர்போற்ற உறவு கொண்டு
உளம் மலர உணவளித்து
உவகையுடன் பெருமை கொண்டு
காலாற வருவோர்க்கு கதைபேசி
இளைப்பாற இடமளித்து
தேநீர் ஊற்றி மனங்குளிர உபசரித்து
வயிராற மனதார நன்றி சொல்லி
விடைபெற்றுச் செல்லும் உம் உறவுகள்
கொடுத்தது போதும் என்று
பொறுக்கவில்லை காலனுக்கு
கொலைகாரப் பாவி அவன்
கொன்று குவித்ததேனோ?
நினைவினில் என்றும் நிலைத்திருக்கும்
என் செல்ல மாமி
ஓம் சாந்தி

யோகி (மருமகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பு அப்பம்மாக்களுக்கு...

எங்கள் இருவருக்கும் கிடைத்த அன்பான
பொக்கிஷம் "அப்பம்மா" நாங்கள் இருவரும்
உங்களுடன் பழகியது சிறிது
காலம் ஆனால் நீங்கள் எங்களுக்குத்
தந்த இனிய நினைவுகளை ஒருநாளும் எங்களால் மறக்க முடியாது
எங்களுக்கு
நீங்கள் சொல்லித் தந்த அறிவுரைகள் எல்லாம் மறக்க முடியாது
எங்களுக்கு
நீங்கள் சொல்லித் தந்த அறிவுரைகள் எல்லாம் எம் வாழ்க்கையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை
எங்களின் ஒவ்வொரு பிறந்த நாளைக்கும்
தொலைபேசியில் எங்களை அழைத்து
வாழ்த்தி மகிழ்வீர்கள் இனி யார் எங்களை வாழ்த்துவார்கள் நீங்கள்
எங்களுக்கு கற்றுத்தந்த அறிவுரைகளையும் ஒழுக்க நெறிகளையும் சிறந்த பண்புகளையும்
நாங்கள் எங்களது வாழ்க்கையில்
என்றென்றும் கடைப்பிடிப்போம்
உங்களின் அன்பான சிரிப்பும் கனிவான சொற்களும் அன்பும் பாசமும்
நிறைந்த இனிய நினைவுகளும் எங்களின் ஆழ்ந்த மனதிலே என்றென்றும் அப்பம்மா

We Love you and we Miss You

**கார்த்திகன் கபிலன்**
**பேரப்பிள்ளைகள் கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நாகசுந்தரி
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தத்தைப் பலமாக்கி தொடர்ந்தது எம் உறவு

நெடுந்தூர ஆழியுள்
நிலவு போன்ற எம் தீவாம் நெடுந்தீவு
நிம்மதியாய் வாழ்ந்திருந்தோம்
நித்திலத்தில் அன்புத் தங்கைகளாய்
பாசத்தில் திளைத்திருந்தோம்
ஆசை மச்சாள்மாராய்
சின்னப் பராயம் முதல்
சொந்தங்கள் ஒன்று கூடி
ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தோம்
அந்தக்காலம்
மாவிலியில் வந்துதித்த
மங்கைகளாம் செல்லம், மாணிக்கம்
தங்கைகள் இருவரின் செல்ல மகனாம்
செல்வனை எமக்குத் தந்து
சொந்தத்தைப் பலமாக்கி தொடர்ந்து
எம் உறவு
நாட்டை விட்டு நாம் பெயர்ந்தோம்
தாய்வீட்டை விட்டு இடம் பெயர்ந்தோம்
நெஞ்சமெல்லாம் நினைந்தே இனிதே
வாழ்ந்தோம் நிறைவாக எம்
நினைவுகளில் அழியா சொந்தம்
நேசத்தால் உயர்ந்தீர்கள் என்றும்
ஓம் சாந்தி

**கந்தையா இராசேஸ்வரி குடும்பம்**
**(விதானையார்) கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிலியின் மாதரசி

மாவிலித்தாய் தந்த
மகத்தான புத்திரி - நீ
மண்மணம் மறக்காத
மாண்புமிகு மாதரசி

அன்புடனே அரவணைக்கும்
அன்புள்ளம் கொண்டவள் - நீ
அற்றார் பசி தீர்த்த
அன்னபூரணி நீ

துன்பங்கள் சில கடந்து
துயரங்கள் பல சுமந்து
துணிவுடனே வாழ்ந்து எம்
துயர் தீர்த்த மாதரசி

கொந்தளிக்கும் கடல்லருகே
கொலுவிருந்த மாதரசி
கொடும் பாவி கைபட்டு
கொலை உண்டு போனாயோ

உடன்பிறந்தார் அனைவருக்கும்
உதவியாய் இருந்தவள் - நீ
உலகில் உயிர் உள்ளவரை
உம்மை நாம் மறவோம்

அயல்நாட்டார் வருவோம் என
ஆவலாய்க் காத்திருந்தாய்
ஆசையுடன் வர இருந்தோம்
அன்றி உன்னைப் பாரப்பதற்கு

அனைத்துமே கனவாக
அறிந்த செய்தி இடியாக
அழுத விழி நீர் தேங்க
அனைவருமே வந்து நின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மூடி நீ கிடந்தாய்
கதறி அழுத நெஞ்சம்
கனமாகி போனதம்மா
கண்கள் குளமாகி
கண்ணீர் வழியுதம்மா

காண்போமா இனி அனைவரையும்
காலம் உள்ள காலம் வரை
கயவன் செய்தகொடுமை இதை
கணப்பொழுதும் நாம் மறவோம்

செல்லத்தாய் நீ எமக்கு சின்னத்தாய் ஆனாயே
செவிவழியே உன் குரல் கேட்டு
செழிப்புற்று வாழ்ந்தோமே
செல்லும் வழி சொல்லாமல்
செல்லமே எங்கு சென்றாய்??

குரல் ஓய்ந்து போனதம்மா
குமுறும் நெஞ்சு அடங்கவில்லை
குருதி வடியுதம்மா
குடும்பமாய் எங்கு சென்றாய்?

மக்கள் தேடுகின்றனர்
மாவிலியின் ராணி உன்னை
மாண்புடனே செல்லக்கா என
மாதரசி உனை அழைத்தார்

மக்கள் தனை அரவணைத்து
மகத்தான சேவை செய்து
மாண்புடனே வாழ்ந்த - எங்கள்
மாவிலியின் மாதரசி.

**உங்கள் பிரிவால் ஏங்கித் தவிக்கும்**
**சேதுபதி - நாகம்மா குடும்பத்தினர்.**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பெரியம்மா

## மாதோட்டத்தின் பெருந்தகைப்
## பெண்மணி எங்கள் பெரியம்மா

மாதேட்டத்தின் பெருந்தகைப்
பெண்மணி எங்கள் பெரியம்மா
பாசத்துடனும் பக்தியுடனும்
ஈச்சரத்தில் இருப்பிடம் கொண்டு
இன்முகத்துடன் அன்னமிட்டு உபசரித்து
ஈகையில் சிறந்துர் என்றும்
பாலாவிக் கரையினிலே
பண்புடனும் அன்புடனும்
பழகிய நாட்களெல்லாம்
பாமரரை பண்போடு அரவணைத்து
எம்பெருமான் ஈச்சரத்தில்
அடைக்கலம் கொண்டீர்
பேரீன் வாழ்வுதனை - இவ்
வையத்தில் வாழ்ந்து
ஈஸ்வரனின் சன்னிதானத்திலே
சரணடைந்ததேனோ?
உங்கள் பிரிவை எங்களால்
என்றென்றும் மறக்கமுடியாது
ஓம் சாந்தி

**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்**
**செல்வன் குடும்பம்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியோடு கதை பேசும் பூ முகம் போனதெங்கே...

பசுந்தீவின் அற்புதமே
பாசமுள்ள மாமியே
நிறைவான குணத்தோடும்
நீக்கமற்ற அன்போடும்
பாசமுடன் அரவணைத்து
விழியோடு கதை பேசும்
பூ முகம் போனதெங்கே
இமைப்பொழுதில் காலன் உமைக் கவர்ந்து விட்டான்.
இப்பொழுதும்
கலங்குகின்றோம்
இவ் உலகம் உள்ளவரை உம் நினைவு அழியாது
கொடு விதியின் சதியென்று காலனை நொந்து
உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கந்தையா கமலம் குடும்பம் (அண்ணன்)**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**நெடுந்தீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையை ஓர் சவாலாக வாழ்ந்த எங்கள் செல்லம் அன்ரி

இரமலிங்கம் அன்னபிள்ளை தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்து
நெடுந்தீவு மாலித்துறையில் வந்தோரை
வரவேற்று உணவளித்து உபசரித்து ஊர் போற்றும்
உன்னதப் பெண்மணியாத் தனித்து
வாழ்க்கையை ஒரு சவாலாக வாழ்ந்து எங்கள்
செல்ல அன்ரி எங்களுக்கு ஒர் தாயாக இருந்து
அன்பு, கனிவு பாசம் கொண்டீர்கள். எங்கள் குடும்பங்களில்
நடக்கும் அன்ரி. இறப்பிலும் பிரியாத வரமாக மூவரும்
ஒர் மைத்துனரையும் இவ் வையகத்தில் வாழ்ந்தது
போதுமென அழைத்துச் சென்று விட்டீர்கள் அன்ரி.
இனி எப்பிறப்பில் உங்களை நாங்கள் காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி

**ஐயாத்துரை குடும்பம்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிலியின் வசந்தம் மறைந்துவிட்டது...

இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளுக்கு செல்லமாகவந்து பிறந்த செல்லமகளாம் செல்லம் அன்ரி எல்லோர் குடும்பத்திலும் நடக்கும் இன்ப துன்பம் எல்லாவற்றிலும் பங்கு கொள்ளும் அன்ரியே தாய்க்குத் தாயாகவும் அன்புச் சகோதரியாகவும், பாசமான மைத்துனியாகவும் ஆசை மாமியாகவும், செல்ல அம்மம்மாகவும் பண்பான அப்பம்மாகவும், சிறந்த தாதியாக எமை எல்லாம் வளர்த்தெடுத்த சீமாட்டி ஊருக்கெல்லாம் உணவளித்த அன்ரிக்கு வந்த மாயம் தான் என்ன? நீண்ட நாட்கள் காணாமல் காத்திருந்த சகோதரிகளையும் மச்சானையும் அரவணைத்து கதைகள் பேசி கூடி இருந்து சிரித்து மகிழ்ந்து உணவு பரிமாறி ஆரவாரமாக எவ்வளவு சந்தோசமாக இருந்தார்கள். நெடுந்தீவில் 84 வயதுப் பெண்மணியாக வலம் வந்தீர்களே அன்ரி உங்களின் துணிச்சலும் தன்னம்பிக்கையும் ஒருவருக்கும் வராது. இறப்பிலும் இணை பிரியாது சகோதரிகள் மூவரையும் மைத்துனரையும் அழைத்துச் சென்று விட்டீர்கள். மாவிலியின் வசந்தம் இன்று மறைந்து விட்டது. இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போம் உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி

**வேலாயுதபிள்ளை மாணிக்கம் குடும்பம்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**U.K**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமணி அன்ரி இருவரின் இருப்பிடம் தேடி இறைவனிடம் சென்றதேனோ?

அம்மாவின் ஆசைத்தங்கையாம் - எங்கள் பூமணி அன்ரி
உறவுக்குள் உறவான எங்கள் பாலசிங்கம் சித்தப்பா
பூப்போன்ற மென் இதயம் கொண்டீர்கள்
பொறுமையும் புன்னகையும் கனிவாக பேச்சும்
எம் உள்ளங்களைக் கவர்ந்த அன்ரி, சித்தப்பா
இன்முகத்தோடு விருந்தோம்பி உபசரித்து
ஊர் போற்றும் உன்னத மனிதர்களாக வாழ்ந்தீர்கள்
ஜீவா, ராஜி என இரு மகவுதனைப் பெற்றெடுத்து
மகிழ்வுடனே வாழ்ந்து வந்தீர்கள்
இயற்கையின் நியதியுடன் இருவரும்
இறைவனின் சன்னிதானம் சென்றதனால்
இருப்பிடம் தேடி நீங்கள் இருவரும்
ஒன்றாக இறைவனிடம் சென்றீர்களோ?
உங்களின் பிரிவை எங்களால் மறக்கமுடியாது.

ஓம் சாந்தி

**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,**
**செல்வன் குடும்பம் கனடா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகசுந்தரி தங்கை சிந்தாமணியுடன்





மகன் யோகு (அமரர்)



அமரர் பூரணம் அவர்களின் 100வது பிறந்தநாளில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வமாய் அன்(ரி)னை செல்லம்

செல்லமாய் அழைத்திடும் செல்லம் அன்ரி
செழிப்புடனே பல சேவைகள் செய்திடும்
செல்லும் இடம் எங்கும் சுறுசுறுப்புடன்
சென்னியாய் (சிரசு) திகழ்ந்திடும் எம்
செல்லமான அன்புத் தாயும் அவா
செவ் (நேர்) வழிலே செல்லும்
செந்தாமரை பூவும் அவா

ஆறாவது சுந்தரி நாகசுந்தரி என
அவர் அன்னையால் அன்பாக
அடையாளம் சூட்டப்பட்டவர் நம் அன்னை
அநீதிக்கு அச்சமின்றி துணிவுடனே
அல்லும் பகலும் எல்லா குடும்பங்களையும்
அழகாய் பார்த்திட்ட குலதெய்வமும் அவா
அனைவருக்கும் தூண் போல் நிலையாகவும்
அசராமலும் துணைநின்ற சுறுசுறுப்புத் தாயும்
அன்பான தாயும் அவசியமான தாயும் அவா

வாழ்வினிலே ஏற்றங்களை விட
இறக்கங்கள் பல - ஆனாலும்
அன்னை எதுக்கும் அஞ்சிடாது
எதிர் நீச்சல் போட்ட வீரமங்கை
அந்த நாள் முதல் துடிதுடிப்புடனே
துன்பங்களை துவஷம் செய்து
ஒத்தையிலும் உயர்ந்து நின்ற
செழிப்பான செயல் வீரத் தாயும் அவா

கருணையின் சின்னமாய் காத்திடும் தெய்வமாய்
உள்ளத்திலும் உதவிடுவதிலும் சிறப்பு
எல்லோர் நெஞ்சங்களிலும் செல்வமாய்
நிற்கும் எம் செல்லத்தாய் இன்று
செல்லுமிடம் தெரியாமல் சென்றதேனோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிலே நீர் சொரிய
காலனை திட்டியபடி கதிகலங்கி
கவலை எனும் வலையினுள் சிக்கி
மீள முடியாது தவி தவிக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**கோபாலசிங்கம் சிந்தாமணி குடும்பத்தினர்.**
**(பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்)**

# நீங்கா நினைவுகளுடன் எங்கள் மைத்துனி

பசித்தவற்கு அன்னமிடு பல்லுயிரும் உம்மை வாழ்த்தும் என்பதற்கு இணங்க மாவிலி வழவில் வாழ்ந்து எல்லோரின் அன்பிற்கும் உரித்தான எங்கள் தாய்வழி மைத்துனியே! உங்கள் உபசரிக்கும் பண்பை உறவினர்கள் கூறுவதை விட ஊரே சாட்சியாக நிற்கும் காட்சி கண்முன்னே நிற்கின்றன.

எங்கள் மகள் சிறுமியாக இருக்கும்போது நெடுந்தீவு சென்று மைத்துனியின் வீட்டில் தங்கினோம் அன்னாரின் அன்பான வார்த்தைகளும் உபசரிக்கும் பண்பும் இன்று வரை மகளின் மனதை விட்டு அகலவில்லை. அமரர் கார்த்திகேசு அண்ணர் குமுதினி அனர்த்தத்தில் இறந்த பின்பும் அவர்களின் விருந்தோம்பல் பண்பு சற்றேனும் குறையவில்லை. இவை எல்லதம் நீர்குமிழி ஆகி நிற்கதி அற்று நிற்கின்றோம். ஒரே நாளில் நான்கு மைத்துனிகளையும், அன்பான எங்கள் அண்ணரையும் இழந்த சோகம் இனி வாழ் நாளில் ஆறப் போவதில்லை. இத்துன்பியலில் வாடி நிற்கும் மகன் செல்வன் குடும்பத்தாற்கும் உறவினர்கட்கும் மன அமைதி வேண்டி இறைவனை பிரார்த்திப்போமாக. ஊழின் பெருவலி யாதுள மற்றொன்று சூளினும் தான் முந்துஉறும் என்பதற்கு இணங்கமனம் சாந்தி அடைவோம்.

ஓம் சாந்தி!

**மைத்துனர்**
**செல்லா குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமர் நாகரத்தினத்தின் நினைவாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









அமரர் நாகசுந்தரியின் நினைவுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை இன்றி அழுகிறது நம்தீவு

நாகசுந்தரி என்ற நற்பெயர் உங்களுக்கு ஆனால் அறியார் பலரும் அப்பெயர் தன்னை செல்ல மக்கா என்ற செல்லப் பெயர் தான் சொந்தப் பெயராய் ஆனது உமக்கு எம்தீவின் முகவரி செல்ல மக்கா தான். வந்தாரை வரவேற்று வாய்க்கிதமாய் உணவளித்து எல்லோர்க்கும் இனியவராய் இருந்தீர்கள். கோலேச்சி கணவரைப் பறிகொடுத்த கவலையை ஒதுக்கி வைத்து சிரித்த முகத்தோடு சீராக வாழ்ந்தீர்கள். அறியாத முகங்களுக்கும் ஆதரவு நீங்கள் தான். ஆதரித்து அரவணைத்து அகமகிழ்ந்தீர்கள். என்ன கொடுமை இது எவரும் எண்ணாக் கோரக் கொலையதனால் குடும்பமே போனதையோ மூடி விழிப்பதற்குள் முடிந்ததே அத்தனையும் ஆசை மைந்தன் அருமை மருமகள் பேரர்கள் இருவரும் பேதலித்துப் போனார்கள் என் சொல்லி ஆற்றுவோம் எப்படித் தேற்றுவோம். வாழ் நாள் என்பது மரணிக்கும் வரையன்றி மனங்களில் வாழும் வரையாகும் என்பர் அந்த வகையில் அழியவில்லை நீங்கள் மக்கள் மனதில் வாழ்வீர்கள் என்றும்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**திருமதி விஜயா மருதலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறிடுமோ நெஞ்சம்...

நெடுந்தீவு கிழக்கு மாவிலியில் ஏப்ரல் 22. 2023 அன்று நடைபெற்ற கோரத்தாக்குதலில் இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் செல்லப்பிள்ளைகளான செல்லம், மாணிக்கம் ஆகிய இரண்டு அன்னையர்களினதும், அவர்களுடன் நெஞ்சை உருக்கும் துர்ப்பாக்கிய சம்பவத்தில் உயிரிழந்த சகோதரிகளாக பூரணம், பூமணி, மைத்துனர் பாலசிங்கம் மற்றும் மகாதேவன் ஆகிய நால்வரினதும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம். இந்தத் துயரமான செய்தியறிந்து தமிழுலகமே துயரத்திலும், வியப்பிலும் மூழ்கியது. அவ்வாறான நிலையில் கனடாவில் வாழ்ந்துவரும் இசை ஆசிரியரும், பாடகரும், பாடல்கள் தயாரிப்பாளரும், இசைக்குழு நிறுவனருமாகிய செல்வன் அவர்களின் பெற்ற அன்னையும், வளர்ப்பு அன்னையுமாகிய சகோதரிகளே செல்லம் அம்மாவும், மாணிக்கம் அம்மாவும் என்ற தகவல் அறிந்து ஆறாத்துயரை அடைந்தோம். இச்செய்தி அறிந்தது முதல் இன்றுவரை தமது வழமையான வாழ்வுநிலைக்குத் திரும்பமுடியாத நிலையில் செல்வன் அவர்களும், அவரது குடும்பத்தினரும் உள்ளார்கள் என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக உள்ளது. நெடுந்தீவில் உள்ள ஆலயத்திற்கு ஆன்மீகப் பயணம் செய்யும் நோக்குடன் வெளிநாட்டில் இருந்து வந்தவரும் அங்குள்ளவர்களும் வீட்டில் கூடியிருந்த வேளையில் இத்தகைய கோரச்சம்பவம் நடைபெற்றிருந்தது. இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் இனிமேல் எங்குமே, யாருக்குமே நடைபெறக்கூடாது என்பதே எல்லோரின் எதிர்பார்ப்பாகும். இந்த இழப்பினால் நிலைகுலைந்து போயிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தமது வழமையான பணிகளுக்கும் திரும்பும் உடல், உளத் தைரியத்தை எல்லாம் வல்ல இறைவன் வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**அன்புடன்**
**அகணி சுரேஸ், கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதியாகிறதெம் ஊர்!

இந்து மாக்கடலின்
அலைக்கரம் எழுந்து
மார்பிலடிக்க
மரணித்தழுகிறதெம் மாவிலி!
காலங் காலமாய் எம்
கனவுகளைப்
புதைத்து வைத்த நெடுந்தீவே!!
உன் உறவென இறுகப் பற்றி
உயிர்களை
ஒற்றை நாளில் இழந்தோம்.
உன் நீரெறியும் பாலத்தே
கார்த்திகேசு அண்ணரின்
உயிர்க்கொடையைப் பேசுகையில்
கால் நனைத்து ஓடி மீண்டுவந்து
வாஞ்சையுடன் கால் தழுவும் கடலன்னை!
பல்லாயிரம் வருடமதாய்
நிழல் தந்த அரசமரக் குடையில்
நாம் காலாறி நின்றி
"தம்போரப்பா" கடை!
என் சின்னம்மா சிநேகிதிகளென
அன்புப் பெருவூற்றாய் நீங்கள்.
அன்னைகளே
பாசத்தோடு உறவுமுறை சொல்லி
அழைக்க உங்களின் ஒரு குரலும்
இன்று மிஞ்சவில்லை!
100 வருட வரலாறு
மூச்சற்றுக் கிடக்கிறது
காக்க முடியாது தோற்றுப்
போய்க்கிடக்கிறது எம் நிலம்.
கையாலாதவர்களாகி நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரோடு
திகைத்து நிற்கின்றோம்.
நெடுந்தீவுத் தெருக்களில்
தாயாகித் தந்தையாய்
எம் கண்முன்னால் நின்று
கிளையெறிந்த நல்லவரே
இனி நீங்களும் இல்லை...
எல்லாம் இழந்து
தோற்றுத்தான்
போனோம் நாம்...
அன்று கடலில் 36 பேர்
இன்று கரையில அறுவரென....
எமைக்காத்த
வளர்ப்பு நாயையும்
ஊரையும், உலகையும்
அவர்கள் இனி விட்டு வைக்கப் போவதில்லை.
விடியும் கிழக்கை
இருள் தின்று துப்ப
இருட்டாகிப் போனது
எம் இருத்தல்!
கொத்து, வெட்டுக்
களவு, கொலை குருதியுடன்
எங்கள் நிலம் மறுபடியும்
இரத்தத்துள் தோய...
இளையவர் தொலைந்த பூமியில்
இனி முதியவரும் இல்லை!
இது எமக்கான வீடில்லை
என்கிறது உள்ளுணர்வு!
இது எமக்கான கிராமம் இல்லையென்கிறது
வழிந்தோடும் குருதி!!
எதுவும் நடக்கலாம் என்கிற
அச்சத்தோடு ஊரை விட்டுத்
துரத்துகிறது அதிகாரம்!!

**சித்திவிநாயகம் பிள்ளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் உதிர்ந்துவிட்ட மாவிலி முத்துக்கள்!

இந்த இரங்கலுரையை எழுதத் தொடங்குகிறேன். மாவிலித்துறை கண்முன்னே விரிகிறது. அதன் கடற்கரையில், அந்த மணல் பிரதேசத்தில் நான் ஒரு சிறுவனாக உருண்டு புரண்டு ஓடித் திரிந்த நாட்களின் நினைவலைகள் அலை மோதத் தொடங்குகின்றன. அந்த அலைகளின் வீச்சு மனதை ஆகாய வெளிக்கு உந்தித் தள்ளுகின்றது. அந்த மண்ணில் எனது வாழ்க்கைக் காலம் வெறும் பத்தாண்டுகளே! ஆனாலும் அவை அழியாது எனது மனதில் பதிந்து விட்ட ஆண்டுகள்!

மாவிலித்துறை என்பது நெடுந்தீவின் அழகிய துறைமுகம். அதுவே நெடுந்தீவின் திருமுகமும் கூட. அத்திருமுகத்தில் திலகம்போல அமைந்திருப்பதுதான் பெரியம்மாவின் வீடும் கடையும். மாவிலித் துறைமுகத்தைப் பயணப் படகு வந்து சேரும்போது பயணிகளின் கண்களுக்குத் துறைமுகத் தங்கு மடத்தைத் தாண்டி முதலில் நேரே தெரிவது அவர்களது கடையும் வீடும்தான்.

நான் வாழ்ந்த வீட்டிலிருந்து கூப்பிடு தூரம்தான் பெரியம்மாவின் வீடு. தம்போர் பெரியம்மா என்று அவர் அழைக்கப்பட்டதாக மெல்லிய ஞாபகம். அன்பும் பண்பும் பாசமும் நிறைந்தவர்கள் பெரியம்மாவும் சகோதரிகளும். எனது தந்தை வழி உறவினர்கள். உரிமைப் பங்காளிகள். நெடுந்தீவு மக்களின் விருந்தோம்பல் பண்புக்கு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர்கள்.

அக்கரைக்குப் போகின்றவர்களுக்கும் அங்கிருந்து வருகின்றவர்களுக்கும் ஒரு நிழல் மரமாக, நீர் வார்க்கும் மழை மேகமாக, பசி தீர்க்கும் அட்சய பாத்திரமாக விளங்கியது அவர்களது இடம் என்பதை நான் அறிவேன். உறவினர்களால் மட்டுமல்ல ஊர் மக்கள் அனைவராலும் மிகவும் நேசிக்கப்பட்ட குடும்பம் அது.

அந்த அழகான குடும்பத்தில் 1985ஆம் ஆண்டு மே 15ஆம் நாள் நடந்த குமுதினிப் படுகொலை மூலம் விதி தனது கோர முகத்தை முதலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியது. நெடுந்தீவு மக்களை மட்டுமல்லாது அனைத்து மக்களது இதயங்களையும் உறைய வைத்த துன்பியல் நிகழ்வு அது. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் அச்சம்பவம் ஏற்படுத்திய வலியின் வடு மறையப் போவதில்லை.

ஏற்கனவே அத்துன்பியல் சம்பவத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு அதன் வலியின் வடுக்களைச் சுமந்து கொண்டிருந்த குடும்பத்தில் மீண்டும் இவ்வாண்டு ஏப்ரல் 22இல் பேரிடியாக ஏனிந்தக் கொடூரம் நிகழ வேண்டும்? கானகத்து விலங்குகள் கூட ஆற்ற நினைக்காத கொடூரத்தை மனித வடிவிலிருந்த ஒரு பேய் செய்து முடித்திருக்கிறதா?

ஆறு உயிர்கள் அநியாயமாக வெட்டிச் சாய்க்கப்பட்ட துயரம் தோய்ந்த செய்தி எனது காதுகளை எட்டியபோது அதிர்ச்சியில் சிலகணம் நான் உறைந்து போனேன். நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இன்னும் சில காலம் வாழ்ந்து அமைதியாகத் தமது வாழ்க்கையை நிறைவு செய்ய வேண்டியவர்கள். அவர்களுக்கா இவ்வாறு நிகழ்ந்தது என என்னால் நம்ப முடியவில்லை. செல்வனைத் தொலைபேசியில் அழைத்தேன். மிகுந்த சோகத்தின் வலியோடு அவர் அந்த துயரச் செய்தியை உறுதிசெய்தார்.

“உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே; என்ற தமிழரின் பண்பாட்டு விழுமியம் செத்துப் போய் உண்டி கொடுத்து உயிர் கொடுத் தோரின் உயிரையே பறிப்பதில் களிப்படையும் காட்டுமிராண்டித்தனம் கையோங்கிப் போனதை அறிந்து மனம் மிக்க வேதனையுற்றது. உணவு கொடுத்து, உறைவிடம் கொடுத்து ஆதரித்த அப்பாவி உயிர்களை வன்செயலால் அபகரிக்க எப்படித் துணிந்தது அக்கொடூரனின் மனம்! இந்த அவலத்தைக் குடும்ப உறவுகளால் எப்படித்தான் தாங்கிக்கொள்ள முடியும்? நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் கனக்கிறது.

எனது பள்ளிப்படிப்பு முடிந்தபின் மேற்படிப்பு, தொழிற்துறை, போர்ச் சூழல் என்பவை காரணமாகத் தூர இடங்களுக்கும், வெளி நாடு களுக்கும் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதால் இக்குடும்ப உறுப்பினர் களுடனான தொடர்பு எனக்கு முற்றிலும் அற்றுப் போயிருந்தது. ஆனால் அந்தத் தொடர்பு இங்கே கனடாவில் அன்பு மருமகன் செல்வன் மூலம் மீண்டும் ஏற்பட்டது. எனது நெஞ்சுக்கு மிக நெருக்கமாக இருக்கின்றவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன். மிகத் துடிப்பாக இசைத் துறையிலே தன்னுடைய ஆற்றலை ஓய்வு ஒழிச்சலின்றி வெளிப்படுத்தி வளர்ச்சி பெற்று வந்து கொண்டிருப் பவர். கனடாவுக்கு வந்து குறுகிய காலத்துக்குள்ளாகவே இசைத் துறையிலே தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர். அந்தக் குடும்பத்தின் அன்பும், பண்பும், பணிவும், பாசமும் இவரிடமும் நிறைந்திருப்பதைக் காண்கின்றேன்.

அவ்வாறான மென்மையான உள்ளம் படைத்த இவரால் கருவறை யில் தாங்கி வலிசுமந்து பெற்ற அன்னையின் இழப்பை எப்படித் தாங் கிக்கொள்ள இயலும்? அன்புக் கரங்களால் அரவணைத்து, அமுதூட்டி ஆதரித்து வளர்த்தெடுத்த அன்னையின் உயிர் அவலமாகப் பறிக்கப்பட்ட துயரத்திலிருந்து எப்படி இலகுவாக மீள முடியும் என்பதை யெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்.

பல மாதங்கள் கடந்துதான் ஆற்றாத துயரத்திலிருந்து ஓரளவு இயல்பு நிலைக்குத் அவர் மீண்டு திரும்பியுள்ளார் என்பதைக் காண்கிறேன். மன வல்லமை மீளப்பெற்று அவர் தனது பணிகளில் மீண்டும் ஈடுபட வேண்டும். அதற்கு இறைவனருள் அவருக்குக் கிடைக்க வேண்டும் என வேண்டுகின்றேன். குடும்ப உறவுகளும் இப்பெருந்துயரிலிருந்து மீண்டு மன ஆறுதலடையக் காலம் மருந்தாகும் எனவும் நம்புவோம்.

எம்மை விட்டுப் பிரிந்துவிட்ட அன்பு உறவுகளான பூரணம் அக்கா, மானிக்கம் அக்கா, செல்லம் அக்கா, பூமணி அக்கா, பாலசிங்கம் அண்ணா ஆகியோருடன் மகாதேவன் அவர்களையும் என்றும் நினைவில் நிறுத்திக் கொள்ளுவோம். அவர்களது தூய ஆன்மாக்கள் இறைவனடியில் அமைதியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக!

மண்ணில் உதிர்ந்துவிட்ட மாவிலி முத்துக்களை நெஞ்சிருத்தி அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக உளமார வேண்டி நிற்கும் உறவினன்:

**கவிஞர் மாவிலி மைந்தன்**
**சி. சண்முகராஜா, கனடா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்செய்தி...

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரை**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**

நெடுந்தீவு கிழக்கை வதிவிடமாககொண்டு
மாவிலித்துறை முகத்தில் நாம் இறங்கும்
பொழுது நெடுந்தீவிற்கு செல்லும் அனைத்து
மக்களும் காணும் முதல் நேர்முகமாக இருக்கும்
இல்லம்தான் செல்லக்காவின் வீடு வந்தோரை
வரவேற்கும் நற்பண்பும் உபசரிப்பும் உணவுகொடுத்து
அவர்களை யாராக இருந்தலும் ஆதரித்து
வழி அனுப்பும் பண்பாளர் செல்லக்கா அம்மா அவர்கள்
தனது கணவர் குமுதினிப் படுகொலைக்கு ஆளாகி
இறந்த கவலையையும் தாங்கிக் கொண்டு தனது
செல்லக் குழந்தை செல்வத்தையும் வளர்த்து
நல்லதொரு நிலையில் இருக்கக் கூடியதாக செய்த
பெருமையும் சந்தோஷமும் நிறைந்திருந்த
வேளையில் தனக்கு இப்படியொரு சம்பவம்
நிகழும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை கணவர்
அகாலமரணம் அதேபோல் தனக்கும் வீட்டோடு
இருந்த பாதகனால் நடந்ததையிட்டு உற்றார்
உறவினர் நலன் விரும்பிகள் அனைவருமே நடந்த
கொடூரமான சம்பவத்தை நினைந்து கண்ணீர்
விட்டனர் என் செய்வது விதியின் விளையாட்டு இப்படி
இருக்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை
எனவே அன்னாரின் ஆன்மா சாந்தியும் மோட்சமும் பெற
ஏனைய தெய்வங்களையும் வேண்டி மகன் செல்வம்
குடும்பம் உறவினர்கட்கும் ஆறுதல் கூறி உங்கள்
கவலையில் நானும் பங்கேற்று நிறைவு செய்கிறேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**பிரம்மஸ்ரீ கா.புவனேந்திரசர்மா (மணி ஐயா)**
**இந்துமதகுரு - நெடுந்தீவு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாவிலி இராணி" மரணித்தாரா! மறக்குமா மாவிலி?

அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்கள் விடிகாலைப் பொழுதில் அரக்கனால் அநியாயமாக கொல்லப்பட்ட செய்தி எம் காதுகளில் பேரிடியாக ஒலித்தது. ஒரு கணம் செய்வதறியாது திகைத்து நின்றோம். அப்பாவிப் பெண்களும், ஆண்களும் நித்திரையில் நிர்மூலமாக்கப்பட்ட அந்தக் கணத்தை இப்பொழுது நினைத்தாலும் உடல் எல்லாம் நடுங்குகின்றது. மிருகத்தனத்திற்கும் மேலான படு இராட்சதத்தனத்துடன் கொலை வெறியாடிய கொலையாளி, தனக்கு உணவும் உறைவிடமும் தந்த உறவுகளை வெட்டிச் சரிக்க எவ்வாறு தான் மனம் உந்தியதோ இறைவா?

"செல்லம் அக்கா" என்ற அந்த உறவு வார்த்தை எம்மூரின் மூலை முடுக்கெல்லாம் இருக்கும் குழந்தைகளும் உச்சரிக்கும். செல்லம் அக்காவைத் தெரியாத யாரும் எம்மூருடன் தொடர்பில் இருக்க முடியாது. எம்மூர் வருவோர், போவோர், உற்றார், உறவினர் என்று அனைவரை யும் அன்பால் அரவணைத்து ஆறுதல் வார்த்தை கூறி இன்முகத்துடன் உபசரித்து உறவாடும் அன்புள்ளம் செல்லம் அக்கா. நெடுந்தீவு கிழக்கின் மாவிலி என அழைக்கப்படும் துறைமுகப் பகுதி செல்லம் அக்கா மற்றும் அவரது சகோதரிகளின் உரிமைப்பகுதி. அந்தப் பகுதியின் முடி சூடா இராணியாக பல தசாப்தங்களாக அன்பால் ஆட்சி செய்தவர் செல்லம் அக்கா என்றால் அது மிகையாகாது.

அமரர் கணபதிப்பிள்ளை கார்த்திகேசு அவர்களை திருமணம் செய்து இல்லறவாழ்வை இனிதாக அன்பு மகன் செல்வனுடன் அனு பவித்து வந்த வேளை குமுதினிப் படகின் இன அழிப்பு கொலையில் ஆகுதியானார் அமரர் கார்த்தியேசு அவர்கள். ஒரு படைத் தளபதியே தோற்றுப் போகும் உயரமும், கட்டழகும், உடல்வாகும், வீரமும் கொண்டு திகழ்ந்தவர் அவர். பகை கண்டு அஞ்சாதவர். துணிவும், வீர தீரமும் கொண்ட அவர் குமுதினிப் படகின் நடத்துநராக சென்ற வேளை அந்த அநியாயம் நிகழ்ந்தது. சிங்களக் காடையர்களை எதிர்த்து தள்ளி கடலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து நீந்திய போது துப்பாக்கியால் சுடப்பட்டு வீரச்சாவை தழுவிக் கொண்டார். அவரின் இறப்பின் பின் தேறுதல் அடைந்த செல்லமக்கா தனது மகன் செல்வனின் அரவணைப்புடன் புது உற்சாகம் பெற்று புதுத் தெம்போடு வாழ்ந்து வந்தார்.

வியாபாரக் கலை, தையற்கலை, சமையற்கலை என்பவற்றில் கைதேர்ந்த செல்லமக்கா ஓய்வில்லாமல் உழைக்கும் ஓர் உத்தம உழைப்பாளி என்றால் யாரும் மறுக்க மாட்டார்கள். பார்த்திருக்க உடைகள் தயாரிப்பதில் மிகவும் நேர்த்தியானவர். எப்பொழுதுமே புன்னகை பூக்கும் இதழ்கள், பூச்சொரியும் அன்பு வார்த்தைகள், வரவேற்று உபசரிக்கும் உன்னதமான உயர்ந்த பண்பு. தேனீக்கள் போல என்றுமே சோர்வில்லாமல் சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை எவற்றிலும் நிதானம் நியாயம் என்று அவரின் பண்புகளை அடுக்கிக் கொணடடே போகலாம்.

செல்லம் அக்காவின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பவராக செல்வன் எனும் அருமைப் புதல்வன், அவருக்கு எக்குறையும் இல்லாமல் உயர்வாகப் பேணிவந்தார். கனடாவில் தொழிலதிபராக, சிறந்த பாடலாசிரியராக, பாடகராக நிறைந்த வேலைச்சுமைகளுடன் இருந்தாலும் இங்குள்ள உறவுகள் மூலம் கண்ணும் கருத்துமாக காப்பாற்றி வந்தார். மனக்குறைகள் இருந்தாலும், மகிழ்வான சூழலில் மனநிறைவான வாழ்கையை வாழ்ந்து வந்த செல்லம் அக்காவை தன் உடன்பிறந்த சபோதரிகளுடன் சகலனுடன் தாங்கள் பிறந்து வளர்ந்து நடைபயின்ற வீட்டில் கூண்டோடு இயமன் உயிர் பறித்து விட்டான் என்பதை எண்ணும் போது மனம் ஆற மறுக்கின்றது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"** என்ற தெய்வப்புலவரின் வாக்குக் கிணங்க அன்னாரின் ஆன்மா இறைபாதங்களை அடையும். அன்னாரின் ஆத்மா சாந்த அடைய நாமும் பிரார்த்திப்போம்.

**சங்கரப்பிள்ளை சத்தியவரதன் (J.P)**
**அரசபணி நிறைவு அதிபர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி நாகசுந்தரி கார்த்திகேசு திருமதி நாகரட்ணம் வேலாயுதபிள்ளை அவர்களினதும் சகோதரிகள் திருமதி பூரணம் கனகரத்தினம், திருமதி கண்மணிப்பிள்ளை பாலசிங்கம், மைத்துனர் திரு. பாலசிங்கம் நாகநாதி உறவினன் மகாதேவன் சுப்பிரமணியம்**

# படுகொலை குறித்த நினைவுப் பகிர்வு

நெடுந்திவின் வரலாற்றில் படுகொலை என்ற கொடும்பாத சொல்லை யாரும் எளிதில் மறக்கமுடியாமல் செய்தது குமுதினி இனப்படுகொலை. அந்த இரத்தவலி ஈரம் காயாமல் இருக்கின்றபோதே எமது உறவுகளின் மீதான இந்த ஈனப்படுகொலை மனிதகுல நாகரீகமும், சமூக வளர்ச்சியும், அரசியல் சட்ட ஒழுங்கும் எங்கேயோ சீழ்பிடிக்க தொடங்கியிருப்பதையே புலப்படுத்துகின்றது.

கொல்லப்பட்டவர்கள் ஒரு நீண்ட வரலாற்று பாரம்பரியம்கொண்ட நெடுந்தீவு மண்ணில் பண்புமிக்க குடும்பத்தில் பிறந்து உழைப்பும் அதனால் உயர்வும் என்ற உன்னத நோக்கோடு வாழ்ந்து எமது தீவுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தவர்கள். இந்தப் படுகொலை என்பது ஒரு மனித உயிரின்மீதானது மட்டுமல்ல எமது தீவின் பாரம்பரியத்தின் மீதும் பண்பாட்டின் மீதும், ஒரு வாழ்வியல் ஒழுக்கத்தின் மீதும், வெள்ளந்தித் தனமாக எமது தீவக உறவுகள் அடுத்தவர்மீது கொண்டுள்ள சந்தேகமற்ற நம்பிக்கை மீதும் நடத்தப்பட்ட அயோக்கியத்தனமான துரோகப் படுகொலையாகும்.

உறவாடி உயிர்காவும் இப்பேற்பட்ட செயல்கள் மனித உறவுகளுக்கு இடையிலான அன்பையும் அன்னியோன்னியத்தையும் அழித்துவிடு கின்றது. இயல்பாகவே ஒவ்வொருவரின் எண்ணங்களுக்குள்ளும் வீரிய மற்ற, நம்பிக்கையற்ற காத்திரமற்ற உறவை வளர்த்து ஒரு சமூகத் தையே ஆரேக்கியமற்றதாகிவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையாகவே வாழ்ந்து தமது வாழ்வை இயற்கையாகவே முடிக்கக்கூடிய காலங்களை எட்டிக்கொண்டிருந்த இந்த சகோதர உறவுகளை, அவர்கள் கூடி குலாவி இருந்த பொழுதில் வெட்டிக் கொல்வது என்பது எவராலும் எண்ணிப்பார்க்க முடியாத ஒன்றாகும். மறைந்த உறவுகளின் வாரிசுகள் உலகம் தழுவ பரவியிருந்தபோதும் கனடாவில் எம்மோடு வாழ்ந்தகொண்டிருக்கும் திரு செல்வன் கார்த்திகேசு அவர்கள் பெற்ற அன்னையையும் வளர்த்த அன்னையையும் ஒருசேர பறிகொடுத் திருப்பது பெரும் துயரமாகும். நீண்டகாலமாக எமது ஒன்றியத்தோடு இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற செல்வனின் துயரோடும் உலகம்முழுவதும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற உறவுகளின் துயரோடும் எமது ஒன்றியமும் இணைந்து இந்தத் துயரைப் பகிர்ந்துகொள்வதோடு அவர்களின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றது.

**சு. விவேகானந்தன்**
**தலைவர், நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கார்த்திகேசு நாகசுந்தரி
அவர்களின் தேகவியோகம் குறித்து
துர்க்கேஸ்வரம், ரொறன்ரோ
ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தான பிரதமகுருவும்
நெடுந்தீவு கரமத்தை கந்தசுவாமி ஆலய பரம்பரை குருவுமாகிய
சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணகஷ்சுவாமிகளின்

# பிரார்த்தனாஞ்சலி

"குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

வாழும்போது பிறருக்கும் பயன்தர வாழ்பவர் எவரோ, அவரே பிறவிப் பயனை அடைந்தவர் ஆவார். எத்தனை சோதனைகள் வந்தாலும், அத்தனையையும் கடந்து, தன் வாழ்க்கையைப் பயனுள்ள தாக ஆக்கிக் கொண்டவர் அமரர் கார்த்திகேசு நாகசுந்தரி அவர்கள். துன் பங்கள் வந்தபோதெல்லாம், அது விதிப்பயன் என்று எண்ணி, மனத் தைத் திடப்படுத்திக் கொண்டு இந்தப் பூவுலக வாழ்க்கையை சுமையாக எண்ணாமல், அதற்கு ஒரு அர்த்தம் தேடி, அதில் மனநிறைவு கொண்டார் நாகசுந்தரி அம்மா. தனக்கொரு கடமை உண்டு என்பதை மனத்தில் கொண்டு, அதற்கமைய தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார். தனித்துநின்று எதையும் சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கை கொண்டார். அதை நிறைவேற்றியும் காட்டினார்.

தெய்வபக்தி நிறைந்த அவரை நீண்ட காலமாகவே நான் அறிவேன். நெழுவினிப் பிள்ளையார் ஆலயத்திலும் கண்டிருக்கிறேன். கரமத்தை கந்தசுவாமியார் ஆலயத்திலும் கண்டிருக்கிறேன். அவருடைய தெய்வபக்தியைக் கண்டு நான் வியந்து போவதுண்டு. எல்லோருடனும் அமைதியாகச் பேசுவார். அன்போடு உபசரிப்பார். தன் உறவினர்களுக் கும் ஊரவர்களுக்கும் உதவி செய்வதில் மகிழ்வார். எவருக்குமே கெடுதல் நினைக்காத நல்மனம் கொண்டவர்.

"வாழ்க்கை என்பது இறைவன் வகுத்த வழி"

ஏன் இப்படியெல்லாம் மனிதர் வாழ்க்கையில் நடக்கின்றது என்பதற் கான பதில் எவருக்கும் தெரியாது. பிறந்தவர் ஒருநாள் இறத்தல் நியதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர் மீண்டும் பிறத்தலும் நியதி. ஆன்மாவுக்கு அழிவில்லை. அது என்றுமே நிலைத்திருக்கும். அவருடைய தேகம் மறைந்தாலும், நல்ல ஆத்மா தன் அன்புக்குரியவர்களை ஆசீர்வதித்துக் கொண்டேயிருக்கும். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. தெய்வத்தின் திருவடிகளைச் சேர்ந்திருக்கும் அவர், விட்டுச் சென்ற நல்வாழ்க்கை நெறிகளை ஒவ்வொருவரும் உணர்ந்து, அவ்வழி சென்று, நலம்பட வாழுதலே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக அன்னை ஸ்ரீதுர்க்காதேவியையும் என் குலதெய்வங்களான நெழுவினி விநாயகர், கரமத்தை கந்தசுவாமி யார் ஆகிய தெய்வங்களையும் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

ஓம் சாந்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாகசுந்தரி கார்திகேசுக்கான எங்கள் கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவு இந்து சமுத்திரத்தின் நடுவே நமது தமிழர் தாயகத்தின் வட மாகாணத்தில், பல வரலாற்று அடையாளங்ககளை கொண்டு எழுந்து நிற்கும், மிகப்பெரிய, அற்புதமான தீவாகும். என் தாயும் தந்தையும் பிறந்த இடமும் இந்த அழகிய தீவுதான்.

நெடுந்தீவைச் சேர்ந்த நாகசுந்தரி கார்திகேசுவின் படுகொலை தமிழ் மக்களின் நெஞ்சை உருக்கிய ஓர் துன்பியல் சம்பவத்தோடு என் மனதையும் மிகவும் உருக்கிய ஒரு கொடூர சம்பவமாகும்.

இலங்கையில் தொடர்ந்து நடத்தப்படுகின்ற படுகொலைகளுக்கு நீதி கிடைக்காது என்ற ஓர் கவலைக்குரிய நிலையில் இன்றும் தமிழர்கள் வாழ்ந்து வருகிறோம். அந்த நிலையில், இந்த படுகொலையால், உயிர் இழந்த எங்கள் அப்பாவி மக்களுக்கும், பாதிக்கப்பட்டோருக்கும் பதில் கிடைக்குமா என்பதும் கேள்விக்குறிய விடையம்தான்.

நாகசுந்தரி கார்திகேசு மற்றும் உறவினர்களது படுகொலை, ஒரு மனசாட்சி அற்ற தனி நபரின், பேராசையின் விபரீத வெளிப்பாடே என்பது நம்பக்கூடிய விடையம் அல்ல. நிச்சயமாக, இது கறைபடிந்த குமுதினி படுகொலையின் தொடர்ச்சி என்றே கூறலாம்.

குமுதினி படகில் விசாரணை என்ற பேரில் ஒவ்வொருவராக இயந்திர அறைக்குள் (Engine Room) அழைத்து சென்ற இலங்கை படையினர், படகில் வந்த தமிழர்களை, மூன்று மாத குழந்தை உட்பட வெட்டி கொலை செய்தார்கள். வெட்டுகிறார்கள் என்று தெரிந்தவுடன், அவர்களிடம் இருந்து தப்பி, படகில் அவருடன் வந்திருந்த உயிரோடு இருந்த மீதிப்பேருக்கு "தமிழர்களை வெட்டுறார்களடா" என்று கூறிவிட்டு, கடலுக்குள் குதித்து தப்பிச்செல்லும்போது சுட்டுக் கொலை செய்யப்பட்ட வர்தான் அமரர் அண்ணா கார்த்திகேசு அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மனைவி நாகசுந்தரி கார்த்திகேசு அன்று நடந்த அக் கொடூர சம்பவத்துக்கான முக்கிய ஒரே ஒரு சாட்சி. இதைப்போன்ற அநீதிகளையும், அங்கு வாழும் மக்களின் வாழ்வியலை பற்றியும், இளைய சந்ததியினர்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் பகிர்ந்து கொண்டு இருந்த ஓர் முதியவர்.

அதே நேரத்தில், நெடுந்தீவு கடற்படையின் தீவிர கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இத்தீவுக்கு கடற்படையின் அனுமதி இன்றி யாரும் வரமுடி யாது. இவ்வாறு இருக்கையில் கடற்படையினரின் முகாமுக்கு அருகி லேயே இருந்த இந்த வீட்டுக்குள் நுழைந்து படுகொலை செய்தது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

சிவில் சமூக உறுப்பினரே (Civil Society Spokesperson), எனது யூகத்தை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளூர் ஊடகங்களுக்கு செவ்வி கொடுத்திருந்தார்.

இலங்கை அரசாங்கமும் கடற்படையினரும் இந்த படுகொலைக்கு நிச்சயம் பொறுப்பு கூறவேண்டும்.

நாகசுந்தரி கார்த்திகேசுவின் அரவணைப்பில் வளர்க்கப்பட்ட அவருடைய அன்பு மகன் செல்வன் மற்றும் அவருடைய குடும்பத்தின ருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதேநேரத்தில் எமது கோவில் தேர் திருவிழாவுக்கு சென்ற வெளிநாட்டில் வசித்துவந்த நாகசுந்தரி கார்திகேசுவின் சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்தான் நாகநாதி பாலசிங்கம், பாலசிங்கம் கண் மணிப்பிள்ளை, பூரணம் கனகரத்தினம், வேலாயுதம்பிள்ளை நாகரத் தினம் மற்றும் சுப்ரமணியம் மகாதேவன்.

அவர்கள் அனைவரின் குடுப்பனத்தினருக்கு, என் குடுப்பதினர் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும், நான் சார்ந்துள்ள (Ontario> Canada) மாகாண அரசு சார்பிலும் என் இரங்கலையும் அனுதாபங்களை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**லோகன் கணபதி**
**Markham - Thornhill**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயுடன் மகன் செல்வன்



தாயுடன் சகோதரிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான செல்லம் அன்ரி

தலைத்தீவாம் நெடுந்தீவின் தலைவாசலில் வீற்றிருந்த அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்களின் திடீர் மறைவு எம்மை எல்லாம் ஆழாத்துயரில் ஆழ்த்தியது. அன்பான பண்பான, இரக்க சுபாவமுள்ளவர் களின் மரணம் எப்படி அமைந்தது. என்பதை எண்ண மனம் பதறு கின்றது.

தனது கணவரை 1985ஆம் ஆண்டு குமுதினிப் படுகொலை நிகழ்வில் இழந்து முப்பத்தெட்டு ஆண்டுகள் சுய கௌரவத்துடன் வாழ் வாங்கு வாழ்ந்தவர். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்பதற் அமைய யார் அவரது வீட்டுக்கு சென்றாலும் உணவு கொடாமல் விடமாட்டார். சுவையான அறுசுவை உணவு தயாரிப்பதற்கு அவருக்கு நிகர் அவரே சுறுசுறுப்பானவர். அதுமட்டுமல்லாது ஆடைகள் தைப்பதி லும் முன்னேறியவர். எவருக்கும் தீங்கு நினைக்காத உள்ளம் உறவுகள் அனைவரும் தன்வீட்டுக்கு வரவேண்டும் என்பதில் அவா நிறைந்தவர். ஓய்வாக இருக்கும்போது தேவாரம் படித்தபடி இருப்பார். அவரது மேசையில் தேவாரப் புத்தகம் இருக்கும்.

சகோதரங்களுடன் அன்பாக இருந்தவர். சகோதரங்களுடனேயே இறைவனடி சேர்ந்தார். மரணம் என்பது இயற்கை தான் என்றாலும் இப்படி ஒரு எதிர்பாராத துயரம் ஏற்கமனம் மறுக்கிறது. துறைமுகத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் எத்தனை பேருக்கு அடைக்கலமாகவும் ஆறுதலாகவும் வாழ்ந்தவர். அவர் இல்லாது வீடு சோபை இழந்து இருக்கிறது. அவ்விடத்தால் செல்லும் போது அன்ரியின் எண்ணமும் மலர்ந்த முகமும் எமது மனங்களில் நிழலாடுகிறது. மறக்க முடியுமா? அவரது திடீர் பிரிவால் வாடும் மகன், மருமகள், பேரக் குழந்தைகள் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்ரியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திரு. திருமதி சா. கிருஷ்ணதாஸ்**
**பதிவாளர், ஓய்வுநிலை கேட்டக்கல்வி பணிப்பாளர், நெடுந்தீவு - 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் மிக்க பெண்மணி
# செல்லம் அன்ரி

உறவுகளும் ஊராரும்
புகழ் பாடும் பெருமை கொண்ட தாய்
வந்தாரை வரவேற்று உணவளிக்கும்
எங்கள் அன்ரி என்று பெருமை கொண்டோம்

வஞ்சகன் ஒருவனுக்கு இரையான
அறுவரில் எம் அன்ரியும் என்றே
வேதனையில் தவிக்கின்றேன்
யாரிடம் செல்வோம் இறைவா?

ஊருக்கும் உறவுகளுக்கும்
உரிமையோடு உதவிய நாயகியே
நாம் உயிர்வாழும் வரை
உந்தன் நினைவுகள் எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்

இறைவா உன்னை ஒன்று கேட்பேன்
எம் அன்னை செல்லக்காவை
உன்பாதக் கமலத்தில் ஏற்று விடு
இல்லை யெனில் எம் மண்ணிக்கே
நாயகியாய் தந்து விடு

**தோ. பெர்ணாட்டோ (எடிசன்)**
**நெடுந்தீவு - 12**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் 72)

*எங்கள் தொப்பிழ் கொடி உறவுகளின்,*
*தொடர்புகளை வேரறுத்த கொடும் செயல்*

## மீளாத்துயரில் புதிய தலைமுறை

நெடுந்தீவு.

**வாழுகின்ற மக்களுக்கு, வாழ்ந்தவர்கள் பாடமாக அமையட்டும்,**

தமிழ் ஈழத்தின் தலைசிறந்த தீவாகத் திகழ்வது நெடுந்தீவு,
தனிநிர்வாகப் பிரிவைக் கொண்டதும் நெடுந்தீவே,
இலங்கைத்தீவின் முதல் கிராமமாகத் திகழ்வதும் நெடுந்தீவே.

இலங்கையின் முதல் கிராமசபைத் தலைவியானதும் நெடுந்தீவிலே
சு. நாகேந்திரர், (கொடுவேலி விதானையர்) அவர்களின் மனைவி,
திருமதி நா. செல்லம்மா அவர்கள் தெரிவானதும் நெடுந்தீவே.

இத்திருநாட்டில் இருந்து, தாய்த் தமிழ் நாட்டிற்கு,
உணவுப் பொருட்கள் அனுப்பிய பொன்நாடும் இதுவே.
இதை "ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" என்னும்,
பட்டணப் பாலையில் உள்ள வாக்கியம் பறைசாற்றி நிற்கின்றது.

நெடுந்தீவைப் பசுத்தீவு, பசுந்தீவென அழைத்த திருநாடு.
பொற்சீந்தில் கொடிபடரும் புதுமைநாடு,
அற்புதஞ்சேர் வெடியரசன் கோட்டைகட்டி வாழ்ந்த நாடு,
பெருக்கு மரம் தானே வளர்ந்து பெருமைதரும் திருநாடு,
பெருக்கு வீடுபோல் அமைந்ததொரு அற்புதமே,
**அதைப்பார்க்க ஆயிரம் பேர் வருவதுண்டு**

உடல் தளர்ந்தும் வந்தோரை வரவேற்கும் தாய்மார்கள் பிறந்த நாடு,
இத்தனை பெருமை தரும் பொன்நாடு, நெடுந்தீவு.
7 X5=35 சதுரமைல் கொண்ட தாய் நாடு.
நெடுந்தீவின் போக்குவரத்துக் கேந்திரமே, மாவிலித் துறைமுகமேதான்
அத்தனைக்கும் தலையாக விளங்குவதும் மாவிலியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிலி வீடு

அந்தக்கால நாகரீகத்திற்கமையவே அழகாகக் கட்டிய அரண்மனை. அது ஆயிரமாயிரம் ஆண்டுகள் பரம்பரை, பரம்பரையாக வாழ்ந்தமனை அது.
அன்னப்பிள்ளை மாமியின் பரம்பரை பிறந்த மனை அது,
அன்னப்பிள்ளை மாமி, அவர் தம்பி நாகலிங்கம் அப்பாக்குட்டி
நாகநாதி பிறந்தமனை அது
அந்த வீட்டின் முன்னே, அருட்தந்தை தனிநாய அடிகளாரின் அழகிய சிலை.

## பெரியதுறை வீடு

அழகான தீவின் ஆரம்பத் துறைமுகம் - மேற்கில் பெரியதுறையே,
அன்பே உருவான எங்கள் பெரிய மாமா,
இராமலிங்கம் அவர்களின் தந்தை, திரு. சு. கந்தையா அவர்கள்
சு. நாகேந்திரர் (கொடுவேலி) அவர்களின்
தாய் மாமா என்பது குறிப்பிடத்தக்கது.

எமது பெரிய மாமா அவர்களின் தாய்மனை,
யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை
அருகே அமைந்திருந்த வீடுதான் அது.
அதில் திரு. திருமதி. சு. கந்தையா வள்ளியம்மை
அவர்களின் மூத்தமகனேதான் இராமலிங்கம் அவர்கள்.

அவருக்கிணையாக 04 தம்பிமாரும், 04 தங்கைகளும் இருந்தனர்
திரு. சு. கந்தையா அவர்கள் நன்கு படித்தவர்
சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதில் முன் நின்று உழைத்த பெருமகன். ஆலயங்களில், தேவாரம், திருவாசகம் பாடுவதிலும்,
பயன் சொல்லுவதிலும், பிரசங்கம் செய்வதிலும்
அக்காலத்தில் சிறந்து விளங்கினார்கள்.

திரு. க. இராமலிங்கம் அவர்கள், அக்காலப்படிப்போடு பாய்வள்ளம் எடுத்து, படகோட்டியை வைத்து திரைகடலோடி வியாபாரம் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார்கள்.
பின்னர் இராமலிங்கத்தின் தம்பி க.கணபதிப்பிள்ளை சைவப்பிரகாச வித்தியாசலையில்
அதிபராகவிருந்து செயற்கரிய சேவை செய்து இளைப்பாறினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சைவப்பிரகாச வித்தியாசாலையில் அண்மையில்,
இராமலிங்கத்தின் மருமகன்,
அபிராமிப்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்களின்,
மூத்தமகன் சத்தியவரதன் அதிபராகப் பல ஆண்டுகள்,
கடமையாற்றி பல ஆயிரக்கணக்கான கல்விமான்களை,
உருவாக்கிய பெருமை எங்கள் பரம்பரைக்கு சிறப்பேயாகும்.

சீரோடும், சிறப்போடும், பாய்வள்ளம் வைத்து,
பெரியதுறையிலிருந்து. ஊர்காவற்துறைவரை வணிகம் செய்து,
பல வசதிகளோடும் பல சகோதர, சகோதரிகளோடும்,
வாழ்ந்த வேளை திரு. க. இராமலிங்கம் அவர்களுக்கும்,
உறவுமுறை மைந்துனியான மாவிலி மாமி அன்னப்பிள்ளை அவர்களுக்கும்
மிகவும் சிறப்பாக, மாமியின் இல்லத்திலேயே,
திருமணம் நடந்தேறியது.
**இல்லற வாழ்வைத்தொடர்ந்து,**
திரு. க. இராமலிங்கம் அவர்களின் பாய்வள்ளம் உட்பட அனைத்தும்,
அக்காலப் பெரியதுறைத் துறைமுகத்திலிருந்து,
மாவிலித் துறைமுகத்திதை வந்தடைந்து,
வர்த்தகத்தை மிகவும் திறம்படச் செய்தார்கள்.

**அன்று,**
கொடுவேலியாரின் மைத்துனர், இராமலிங்கம் அவர்கள்,
பாய்வள்ளம் வைத்து பட கோட்டியை நியமித்து வாணிபம் செய்தார்கள்.
பின்னர் அவரின் பேரன் யோகேந்திரன் (செல்வன்) அவர்கள்,
1987இல் இயந்திரப்படகு வைத்து வாணிபம் செய்தமை பெருமைக்குரியதே.

## கொடுவேலியாரின் பேரன்,

நா. அமிர்தரட்ணராசா (இராசா அண்ணாவின்) மகன் பொன்னம்பலம் (பொன்னா) அவர்கள் 2023இல் நவீன முறையில் இயந்திரப் படகு வைத்து, மக்களுக்குச் சேவையாற்றுவதில் பெருமையடை கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தனைக்கும் மேலாக "அறிவகம்"

அப்பப்பா திரு. சு. நாகேந்திரர் அவர்களின் பெயரில்
அனைவரும் போற்றும் அறிவகமும், வைத்து நடாத்தி
ஆண்டபரம்பரை மீண்டும் ஆளத் தொடங்கியமை பெருமைக்குரியதே.

## மாவிலிப் பணிமனை முன்னே

அத்தை, மாமா வர்த்தகப் பணிமனைக்கு முன்னே அழகான நிழல்குடை, அதில் வருவோர், போவோர் அனைவரும் தங்கி நின்று, தாகம் தீர்த்துப், போகாத பயணிகள், இல்லை எனலாம்.

**அத்தனைக்கும் மேலாக,**
நெடுந்தீவு, கிழக்கில்,
திரு. இராமநாதன் சுப்பிரமணியம் (கிளிவிதானையார்) அவர்கள்
திருமதி வேலுப்பிள்ளை பராசக்தி அவர்களின் தந்தை அவர்களும்
பின்னர் திரு. நாகலிங்கம் சுவாமிநாதர் (சங்கிலி விதானையார்) அவர்கள்
திரு. சு. முருகேசு (PT ஆசிரியரியரின்) தந்தை அவர்களும்,
நெடுந்தீவு மத்தியில் திரு. சு. நாகேந்திரர் (கொடுவேலி) விதானையார் அவர்களும் நெடுந்திவு மேற்கில் திரு. சு. இராமச்சந்திரர் (விதானையார்)
கொடுவேலி விதானையாரின் பெரியதாய் மகன் அவர்களும்
தமது கடமைகளைச் சிறப்புடன் நிர்வாகம் செய்து,
கொடிக்கட்டிப் பறந்த பொற்காலம் அது,

## உயர் அதிகாரி உடையார்

நெடுந்தீவின் நிருவாகம் சிறப்போடு இயங்கவே,
கிராம விதானைமார்களுக்கு,
உடையார் என்ற உயர் அதிகாரி கடமையாற்றிய காலம் அது,
நெடுந்தீவின் நிருவாகம் சிறப்போடு விளங்கியபோது
மாவிலி மாமி, மாமா அவர்களின் வியாபாரமும்,
அதி சிறப்போடு சேவை செய்தகாலம் பெருமைக்குரியதே.
பெரிய மாமா, மாமி அவர்களின், இன்பமான வாழ்நாளில்,
அன்பான ஏழு பெண்பிள்ளைகளும், ஒரு ஆண்பிள்ளையும்,
அந்த அரண்மனையிலேயே பிறந்து வளர்ந்து, படித்து, பருவமடைந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து, சிறப்புடன் வாழ்ந்த பிள்ளைகளேதான்,
ஆங்காங்கே சிட்டுப்பறவைகள் போல,
பாரிய குடும்பம், குடும்பமாகப் பிரிந்து பல இடங்களில் குடியேறினர்,

### அமரர் திருமதி நாகம்மா திரு. சு.சேதுபதி அவர்கள்

மாமாவின் மூத்தமகள்
திருமதி நாகம்மா அவர்கள் சு. சேதுபதி விதானையாரைத் திருமணம் செய்து நல்மக்களைப்பெற்று நெடுந்தீவு மேற்கில் சிறப்புடன் வாழ்ந்து, காலமானார்கள்.

### அமரர் இரா. கந்தையா அவர்கள்.

மாமாவின் ஏகபுத்திரன் திரு. இரா. கந்தையா அவர்கள்
காணி அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து நெடு/மேற்கில்,
கமலம் என்பவரைத்திருமணம் செய்து
சிறப்புடன் வாழ்ந்து நல்மக்களைப் பெற்றுப் பின் காலமானார்கள்

### அமரர் திருமதி. பொன்னம்மா ஐயாத்துரை அவர்கள்.

மாமா, மாமியின் மூன்றாவது பொன் மகளான, அமரர் பொன்னம்மா அவர்கள் திரு. நா. ஐயாத்துரை, (கிராமசபை உத்தியோகத்தர் அவர்களைத் திருமணம் செய்து நல்ல மகனான மூத்தமகன் காலமானார்.
அடுத்தமகன் அதிபராகவிருந்து, ஒய்வு பெற்றிருக்கின்றார்.
பொன்னம்மா அவர்களின் கடைக்குட்டியான தயாபரன் அவர்கள்,
யாழ்/ கல்வி வலையத்தில் உதவிப் பணிப்பாளராகப் பணிபுரிகின்றார்கள்.

### அமரர் திருமதி சு.வ.சு கோ.சிந்தாமணி அவர்கள்

மாவிலி மாமியின் கடைக்குட்டிதான்.
திருமதி. சிந்தாமணி அவர்கள் திரு. சு.வ.சு கோபாலசிங்கம் (S.K) அவரைத், திருமணம் செய்து, இரண்டு ஆண்பிள்ளைகளைப் பெற்றுச், சிறப்படன் வாழ்ந்து இனிதே காலமானார்கள்.

### அமரர் பூரணம் அவர்கள்

அமரர் திருமதி பூரணம், கனகரத்தினம் அவர்கள்,
பிறந்த மண்ணிலேயே, திருமணம் செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதாழ்வில் (மன்னார்) குடியேறியவர்
இவரின் கணவர் தா. கனகரத்தினம்
மன்னாரில் பிரபல வர்த்தகர்

அமரர் பூரணம் அவர்கள், மாமிசம் உண்பதில்லை,
ஆனால், தினமும் அசைவம் சமைத்து
கணவருக்கும் கணவரோடு வரும் விருந்தினர்க்கும்
மனம் கோணாது உணவு பரிமாறும் பண்புடையவர்.

**கணவனே கண்கண்ட** தெய்வமென வணங்கினார்கள்
கணவர் இறந்ததில் இருந்து.

அமரர், பூரணம் அவர்கள் மரணிக்கும் வரை தினமும்,
காலை, மாலை எனக் கணவனைத் துதித்தபின்பே,
உண்பதும் உறங்குவதும் எனலாம்.
திருக்கேதீச்சரத்தானின், இறைபாதமே இவருக்குத் துணை

அமரர், பூரணம் அவர்கள் சிவ பக்தன் இறுதியில்
தன் தாய் மனையில் தங்கை வீட்டில் காலமானார்,

**மாதரசி திருமதி வேலாயுதபிள்ளை நாகரத்தினம் அவர்கள்**
**மதிப்பிற்குரிய மாவிலி மகள்**

அன்றலர்ந்த தாமரைபோல் அவர் இருப்பார்.
அவர் என்றும் புன்சிரிப்பால் பூத்திருப்பார்.
அனைவரிலும் அன்பு வைப்பார்
அனுதினமும் விருந்தினரை அனுசரிப்பார்.

நாகரத்தினத்தின், நற்குணத்தால், நற்படிப்பால் நல்லதொரு வேல்தாங்கி வந்த
வேலாயுதபிள்ளை எனும் நற்குணத்தோன், கணவரானார்.
நல்லதொரு துறையான, காவல்துறையினிலே நற்பணியைச் செய்த நல்ல
அதிகாரி. நல்லதொரு மனைவிக்கு, நற்குணத்தோன் கணவனாகி

நானிலம் போற்றும் நல்லோரைப் பெற்றெடுத்த பெருமாட்டி,
நற்குணத்தான், பிள்ளைகளோ
நாடுதோறும், நற்பணியே சேவையெனச் செய்கிறாரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனைக்கும் மேலாக அம்மையரின் பேரர்களோ
நாகரத்தினத்தின் அறிவுரையால் அனைவருமே, கற்றறிந்த பிள்ளைகளாய்,
அவரவர் துறையினிலே மேதையாகி
ஆங்காங்கே வாழ்வதைக் காணலாமே

அன்னாரின் - மருமக்களோ,
அவருக்குக் கிடைத்த அரிய சொத்தாச்சே!
அன்னை எனும் நாகரத்தினம் அவர்கள்
அவரின் கணவரை இறுதிவரை.
தன் கண்போல் பார்த்த பெண்ணாச்சே!

இலண்டனிலே இன்பமாய் வாழ்ந்த அவர்
இங்கு வந்த கையோடு இருட்டறையில் மாண்டதென்ன

**திரு நாடலங்கரித்த மாதரசி. திருமதி அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்களின் மறக்க முடியாத நினைவுகள்.**

அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)
தமிழ் ஈழகத்தின் தலை சிறந்த தீவாகத் திகழும் நெடுந்தீவிலே. தாய், தந்தையரின் அரண்மனையில் பிறந்த அமரர் அவர்கள்.

தாய் மனைக்கு அருகே
அழகான வீடு கட்டி வாழ்ந்த காலம் அது,

"உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே!"
என்னும் பொன்மொழிக்கு அமைய
அமரர் அவர்கள் தமது இல்லம் தேடி வந்தோரை.
வரவேற்று, ஆதரித்து விருந்தோம்பி,
வழியனுப்பும் பண்புடையார்,

அமரர் என்றுமே சுறு சுறுப்பானவர்,
அவர் தன் சுய முயற்சியால், வெற்றிகண்டவர்.
அவர் சமையல் கலை, தையல்கலை எனப்,
பல கலைகளைக் கற்றறிந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் நாகசுந்தரி பருவப் பெண்ணானதும்,
அவரின் பெற்றோர் உறவுமுறை மருமகனாக
குமுதினிப்படகு நடாத்துனர்
திரு. கணபதிப்பிள்ளை, கார்த்திகேசு என்பவரைத்
திருமணம் செய்து வைத்தனர்,
தம்பதிகள் இருவரும், ஒருடலும், ஈருயிரும் போல் வாழ்ந்தவேளை
அவர்களின் ஏகபுத்திரனாக
லோகேந்திரன் (செல்வன்) அவர்களைத்
தத்தெடுத்து வளர்த்து வந்தவேளை
செல்வன் அவர்களும் வளர்ந்து வந்த போது
சசி, சுசி ஆகியோரையும் தங்கள் பிள்ளைகள் போல
அவர்களுக்கும் பாலூட்டி தாலாட்டி வளர்த்தனர்
மூன்று செல்வ மக்களையும், வளர்த்து வந்த வேளை,

யாழ்/ நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவை
மக்களுடன் வந்து கொண்டு இருந்த வேளை

**15.05.1985**

அன்று, பச்சிளம் பாலகன் உட்பட
36 பேர் இரத்த வெள்ளத்தில் மிதந்தவேளை
அன்றைய படகு நடாத்துனரான கார்த்திகேசு அவர்கள்
அன்றைய கொலையைச் செய்த
அரச படைகளுடன் வாதாடியபோது
அவருக்கும் ஆபத்துவரவே, கார்திகேசு அவர்கள்
கடலில் குதித்து நீந்தியவேளை
கடல்படைகளால் சுடப்பட்டு காலமானார்

**மீனாத்துயரில் நாகசுந்தரி**

அன்றைய படுகொலையையும்
அன்புக் கணவன் கார்த்திகேசு அவர்களின் இழப்பையும்
தாங்கமுடியாத காலம் அது.
அமரர் நாகசுந்தரி அவர்கள் இல்லறவாழ்வு
கணவன் மனைவியாக வாழ்ந்த காலம்,
ஆக 17 ஆண்டுகளேதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனை இழந்த அந்த 38 ஆண்டுகளும், தமது கணவனை அனுதினமும் வணங்கித் துதித்தார்களே தவிர அவருக்கு வேறு தீய சிந்தனைகள் இல்லை எனலாம்.

அமரர் அவர்கள் தான் விரும்பி வளர்த்த
அக்கா நாகரத்தினம் வேலாயுதபிள்ளை அவர்களின்
லோகேந்திரன் (செல்வன்) அவர்கள்
வாலிபப் பருவமானதும்
அமரரின் அண்ணன் திரு. நா. கந்தையா (விதானையாரின்)
அன்பு மகளான யோகேஸ்வரி (யோகி)
என்பவரைத்திருமணம்செய்து சிறப்புடன்வாழ வழிகாட்டிய
பெருமைக்குரியவராவர் சிறப்புடன் வாழ்ந்த நாகசுந்தரி
வீட்டில்நடந்ததென்ன?

**பெண்ணரசி**

**பெருமைக்குரிய பெருந்தகை அமரர். கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களின் மறக்கமுடியாத நினைவலைகள்.**

“அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்”
அதற்கமைய, பெருவாழ்வு வாழ்ந்த பெருந்தகை
அம்மையார், மாவிலி மண்ணில் பிறந்து
அளவு மீறிய அன்புகொண்ட ஐந்து (05)
அக்காமார் மடியில் வாழ்ந்து.
அனைவரும் போற்றும்
அன்பு, அண்ணாவின் தோள் மேலும், கைமேலும்
அல்லும் பகலும் தவழ்ந்து விளையாடியவரே
அன்புக் கண் மணி - பிள்ளை எனலாம்.
கண்மணிக்கு அடுத்தவரே கடைக்குட்டி தவமேதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்நிகரில்லாத் தலைவன்**

மாந்தை கிழக்கில் முடிசூடா மன்னன்.

மக்கள் போற்றிய மனேச்சர்

**அமரர்**

**திரு. நாகலிங்கம், அப்பாக்குட்டி, நாகனாதி பாலசிங்கம்**

**அவர்களின் நீங்கா நினைவுகள்**

"அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் 72)

தமிழ் ஈழத்தின் தலை சிறந்த தீவாகத்திகழும் நெடுந்தீவு மேற்கில்
தாய் மாமா, இராமலிங்கம் பிறந்த வீட்டில் பிறந்து,
அதே வீட்டில் வளர்ந்து.
அருகிலுள்ள யாழ்/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில், ஆரம்பக் கல்வியையும்,
பின் யாழ்/ நெடுந்தீவு மத்திய மாகாவித்தியாலத்தில் படித்து,
அத்தனை பாடத்திலும் சிறப்புப் பெற்றமை திறமைக்குரியதே

வவுனியா, விவசாயப்பாடசாலையில் பயின்று பின்னர் கூட்டுறவுப் பயிற்சியில் சிறப்புப் பயிற்சி பெற்றுப் பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் மனேச்சரானார்.செல்வபுரம், சிவபுரம் ஆகிய சங்கங்களில் சேவை செய்தார்.

திருமணப்பருவமடைந்த மகனுக்கு,
தாய் மாமன் மகளான,
கண்மணிப்பிள்ளை நெசவு ஆசிரியை அவர்களைப்
பெற்றோர் மாவிலி வீட்டில்,
மிகவும் சிறப்பாகச் செய்து வைத்தனர்.

அமரர் நா. பாலசிங்கம் அவர்களும், துணைவியாரும்,
மாந்தை கிழக்கில் அளப்பரிய சேவை செய்து வந்தனர்,
இருவரும், தான தருமம் செய்வதில் வல்லவர்கள்
கடவுள் பக்தியுடையவர்கள்.

பாண்டியன் குளம்பிள்ளையார், ஆலயத்திற்கும்
சிவபுரம் சிவன் ஆலயத்திற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு, நெழுவினிற்பிள்ளையார் ஆலயத்திற்கும் அளப்பரிய சேவை செய்யும் பக்தர்களாவர்.
இவ்வாறு, நல்மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்த வேளை

நெடுந்தீவு மாவிலிவீட்டில்
அனைத்து உடன் பிறப்புக்களுடனும்,
எமது அன்புறவு மகாதேவாவுடனும்
சிலதினம் அன்பாக இருந்து
உறவாடலாம் என எண்ணி
இருவரும் மாவிலியில் இருந்த வேளை.

**இருட்டறையில் கண்ட சோகத்தை மறக்குமா நெஞ்சம்,**
**22.04.2023ல் அடுத்து வரும் அமர்கள் செய்த குற்றமென்ன.**
**தாங்கொணாத்துயரில் உறவுகள்**

பரிதாபம், ஈவிரக்கம், பாவமெனச் சொல்லும்.
பாவையர்கள் மலிந்த வீடு.
பசியென்று வந்தவனைப் பாவம் பார்த்த,
பெண்மணிகள் இருந்தவேளை,

**பசியாற உண்டவனே இயமனாகிப்**

படுபாவிக் கொடியவனே, கொலையைச் செய்தான்
எதற்காக அறிந்தாயோ, ஏன் இதைச் செய்தாயோ,
ஏன் இன்று கடும் சிறையில், கரிபோலானாய்
கொடியவனே, நீ செய்த நோக்கமென்ன
அன்னியனே! உனக்கும் ஒரு சாவு உறுதியாய்த்தானிருக்கு.

**அனைத்து ஆத்மாக்களும் சாந்திபெற வணங்குவோமாக!!**

356, திருநகர்
யோகபுரம்
28.09.2023

**பாலசிங்கம் (குடும்பம்)**
**ஓய்வு நிலை விவசாயப்போதனாசிரியர்**
**முல்லைத்தீவு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் மக்கள் ஏக்கம்

அதிகாலைப் பொழுது அமைதியற்ற விடியல்
கடலன்னை பொங்கி எழுந்து ஆர்ப்பரிக்கின்றாள்
காற்று நாற்திசையும் சோகம்
நிறைந்த செய்தியை கொண்டு பறக்கின்றது
உலகம் பூராகவும் அலைபேசிகள்
முழங்கி நிற்கின்றன
ஊர் மக்களோ சட்டத்தை
கையில் எடுக்க முடியாமல்
கோபத்தில் தவித்துப் புலம்புகின்றார்கள்
உறவுகளோ செய்வதறியாது
சோகத்தில் தவித்து நிற்கின்றார்கள்
வீர மறவர் வாழுகின்ற நெடுந்தீவில்
இப்படி ஒரு செயலா?
என்று எண்ணித் தவிக்கின்றோம்
அன்புச் சகோதரிகளின் ஆன்மா
சாந்தியடையட்டும்.

பிரிவால் துயருறும்
நெடுங்தீவு மக்கள் சார்பாக
இரா.தர்மரட்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்களின் நினைவுகளுடன்

இலங்கைத் தீவின் சிவபூமி என்று சான்றோர்களால் அழைக்கப் படும் யாழ்ப்பாணத்தின் காவல் அரண்கள் போல் அமைந்திருக்கும் தீவுக் கூட்டங்களுள் தனித்துவமாய் கடலன்னையின் தாலாட்டில் இயற்கை அழகு கொஞ்ச தீவுகளுக்கெல்லாம் அரசியாக வீற்றிருப்பது எங்களின் தாய் நாடான நெடுந்தீவு ஆகும். இதேபோல் எத்தனையோ பல சிறப்புக்களைக் கொண்ட எமது தீவகத்தின் மாவிலி இறங்கு துறையில் வந்தோரை வரவேற்கும் சிறந்த குணமுடைய குடும்பத்தலைவர்களாக செல்லக்காவும் அவவின் சகோதரர்களும் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

நாங்கள் சிறுவயதில் செல்லக்காவின் கடைசி சகோதரி தவ மக்காவிடம் சென்று அவர்களின் கடையில் விதம் விதமான இனிப்புக்கள் எல்லாம் தருவா வாங்கிச் சாப்பிடுவோம். அன்போடும் பரிவோடும் எங்களைக் கண்டதும் நிறைய இனிப்புக்கள் தருவா காசெல்லாம் வாங்க மாட்டா. இவர்களது குடும்பமும், எங்களின் ஐயா அம்மா பிள்ளைகளாகிய நாங்கள் எல்லோரும் மிகவும் அன்பாகவும் பாசமாகவும் மிகவும் அன்னியோன்யமாகவே இன்றுரை வாழ்ந்து வந்தோம்.

எங்களின் ஐயா அம்மாவுக்கு செல்லக்கா என்றால் மிகவும் பிடிக்கும். நாங்களும் பின்னர் யாழ்ப்பாணத்தில் வந்து வசித்தாலும் அவர்கள் எல் லோரும் யாழ்ப்பாணம் வந்தால் எங்களின் வீட்டிற்கு வராமல் போக மாட்டார்கள். அதேபோல் நாங்களும் நெடுந்தீவுக்குப் போகும் போதெல்லாம் அவர்களின் வீட்டிற்கு நெடுந்தீவுக் சென்று அவர்களை காணாமல் திரும்ப மாட்டோம். அப்படியான ஒரு உறவாகவே நாங்கள் வாழ்ந்து வந்தோம். செல்லக்காவின் சகோதரர்கள் ஒவ்வொருவரும் வேறு ஊர்களுக்கு சென்றாலும் செல்லக்கா மட்டும் அங்கேயே தனது வீட்டிலேயே சந்தோசமாக வாழ்ந்து வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் கடந்த 38 வருடங்களின் பின்னர் இந்த வருடம் எனது தாய் நாடான நெடுந்தீவு சென்று செல்லக்காவை கண்ட போது அவவுக்கு மிகவும் சந்தோஷம். வீட்டிற்கு வருவோரை உணவு கொடுத்து அன்பாக உபசரித்து வழியனுப்பும் பண்பை அவவிடம் நான் கண்டேன். இப்படி யெல்லாம் சிறப்பாக சந்தோசமாக மாவிலி வீட்டில் வாழ்ந்து வந்த செல்லக் காவிடம் எங்கேயோ இருந்து வந்த ஒரு அந்நியன் ஒரு கொலைக்கார பாதகன் அங்கேயே தங்கி அங்கேயே உணவருந்தி அதிகாலை ஊரே உறங்கியிருந்த வேளையில் செல்லக்காவையும் அவவின் மூன்று சகோதரிகள் ஒரு சகோதரியின் கணவர் மேலுமொரு உறவினர் என்று எல்லோரையும் கொலை செய்து விட்டு எப்படியோ தப்பிச்சென்று விட்டான். எங்கள் ஊரே இச்சம்பவத்தால் திணறிப்போய் விட்டது. இப்படி ஒரு சம்பவத்தை எங்கள் ஊர் மக்கள் சந்தித்திருக்க மாட்டார்கள். இப்படி ஒரு படுபாதகச் செயல் செய்தவனுக்கு கடவுளின் தண்டனை கிடைத்தது. எமது ஊர் மக்கள் மூலமாக அவனைக் கண்டு பிடித்து அவனுக்கு மாவிலி தண்டனை கடவுளால் வழங்கப்பட்டது. இன்று மாவிலி இறங்கு துறையில் இறங்கியதும் வெறிச்சோடிப் போயுள்ள கதவெல்லாம் பூட்டியுள்ள செல்லக்காவின் வீடே எங்களை வரவேற்கின்றது. மனது கனக்கின்றது. அவவின் உருவமும் அவவின் நினைவுகளும் எங்களின் மனதை விட்டு ஒரு காலமும் மறையாது. செல்லக்காவின் ஆத்மா இறை வனின் பாதத்தில் சாந்தியடைய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**திரு நாகேந்திரர் கணபதிப்பிள்ளை விதானையார்**
**திருமதி கணபதிப்பிள்ளை சற்குணம் - ஆசிரியர்**
**அவர்களின் சார்பாக**
**திருமதி உதயவேணி குருபரன் குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளுடன்,

செல்லம் அப்பம்மா என சிறியவர் முதல் பெரியவர் வரை அன்புடன் அழைக்கும் எமது அப்பாவின் சிறிய தாயார் அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்களின் நினைவுகள் எமது நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும். ஊரவர் எல்லோரும் உற்றதொரு உறவென தோழமை கொண்ட அன்பு உள்ளம் படைத்த அப்பம்மா. நெடுந்தீவில் நாம் வாழ்ந்த காலங்களில் அயலவர்க்கு அயலவராய் சொந்தத்திற்கு சொந்தமாய் நீங்கள் எம்முடன் ஒன்றித்து வாழ்ந்ததை நாம் மறந்துவிட முடியாது. உங்களது மனவலிமையும் துடியாட்டமும் வாழ்க்கை முறையும் என்றுமே எமக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஊரில் நாம் வாழ்ந்த காலங்களில் உங்களது கைவண்ணமே எங்களது பாடசாலைக் காலங்களில் சீருடைகள். அருமையாக உடைகள் தைத்து எம்மை அழகு பார்த்த அன்பையும் உங்கள் வீட்டிற்கு வந்தால் அரவணைத்து நீங்கள் தரும் அமுதையும் உயிருள்ளவரை நாம் என்றும் மறவோம். நாம் எத்திசைகள் சென்றபோதும் உங்கள் அன்பு முகம் மறந்ததில்லை. உங்கள் காலடிக்கு காணிக்கை செலுத்த இறைவன் எமக்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி இக்கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**என்றும் அன்புடன்**
**மனோ (குணம்) மற்றும் பிள்ளைகள்**
**(மேனன், மீனா, லாவண்யா, கோகுலன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VIJAY THANIGASALAM, MPP**
Scarborough—Rouge Park

# இரங்கற் செய்தி

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவில் இறைபதம் அடைந்த திருமதி. நாகசுந்தரி கார்த்திகேசு அவர்களின் இழப்பால் வாடும் கனடாவில் வசிக்கும் அன்னாரின் மகன் செல்வன், மற்றும் அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரினதும் துயரில் பங்கெடுத்துக் கொள்வதுடன், அவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை வேண்டு கிறேன்.

**விஜய் தணிகாசலம்,**
**மாநில சட்டமன்ற உறுப்பினர்,**
**ஸ்காபரோ - றூஜ் பார்க்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் வணக்கம்

இந்து சமூத்திரத்தின் மத்தியிலே ஈழத்திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாண மண்ணின் கடல்வழி புகழ்தரும் தீவாகிய நெடுந்தீவு. அந்த தீவின் அழகும் அறிவும் அகிலத்தில் வாழும் தமிழர்கள் அறிவார்கள். ஆழ்கடல் அலைகள் முத்தமிடும் கடற்கரையும் ஆலயமணியும் ஆண்ட வனின் அருளும் மார்பொழியும். வானம் பார்த்து பயிர்விளைவித்து தானம் குறையாது தருமம் செய்யும் மானப் பெரிய மண்ணில் நடந்தது கனவா நனவா என புரியாது புலம்புகின்றோம். நண்பன் பாடகர் கே.வி.செல்வனின் தாயாரும், சித்தியும், மாமாவும் ஒரே இடத்தில் கொடூரச் சம்பவம் அறிந்து கலங்கி விட்டோம்.

கோவில் திருவிழாவைக் காணச் சென்ற உறவுகளுக்கு காலன் காத்திருந்து எண்ணம் கொண்டு கன்னம் வைத்து கொல்ல நினைத் தானோ! இது தகுமோ. இது நியாயமோ,அள்ளிக் கொண்டு போக அலைக்குள் அகப்பட்ட மீனா அல்லது வலைக்குள் அகப்பட்ட மானா? இறைவா! ஒன்றா இரண்டா பல கொலைகள் ஒரேஇடத் தில் நடந்ததது எண்ணிக் கலங்கிவிட்டோம். இன்பமாக மகிழ்வாக மனி தன் வாழ்வ தற்கு ஏற்ற அனைத்தையும் இவ்வுலகில் இறைவன் படைத்தான். மனி தனில் மிருகக் குணம் மலித்திப்பதை பார்க்கின் றோம். ஆயினும்

**"நெருநல் உள்னொரவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு"**

என்று வள்ளுவன் எழுதிய எழுத்தைக்கூட இந்தக் கொடுக்கொலை கள் தவிடுபொடியாக்கி விட்டது. ஒர் உறவை இழந்தலே உலகில் கத்திக் குழறிக் கவலையடைந்து சொல்லொணாத் துயரில் மூழ்கிப்போகும் காலத்தில் பலஉறவுகளை கண்முன்னே காவு கொடு த்தோம். கடவுளே உன்னை வழிப்பட்டு ஊரின் வலம்வர வரம் கேட்டிருந்த வேளை இரக்கம் காட்டி இருக்க விட்டவன் வடிவில் காலன் கொடியவனாக வந் தானோ? ஊர்உறங்கும் வேளையில் கண்மூடித்தூங்கும் நள்ளிரவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயவஞ்சகமாக மிகமிக கொடூரமாக உயிர்பறிக்தான். விடியும் வேளை வீடெங்கும் குருதிமயம் படியும் சூரிய கதிரும் வாடியசோகத்தில் தீவெல் லாம் ஆழ்த்தியது. நெடுந் தீவு மட்டுமல்ல நெடுந்தூரத்தில் வாழும் தமிழர்கள் அனைவரையும் கடும்துயரத்தில் ஆழ்த்தியது. இறைவா இன்னுயிர்கள் வாழ நல்லுகம் தரவேண்டும். எங்கள் தாய், சித்தி, சித்தப்பா, மாமா ஆகிய கார்த்திகேசு நாகசுந்தரி,வேலாயுதபிள்ளை நாகரத்தினம், கனகரத்தினம் பூரணம், பாலசிங்கம் பூமணி, நாகநாதி பாலசிங்கம்,சுப்பிரமணியம் மகாதேவன் அனைவரின் மெய்யுயிகள் அமைதியாக அருள்புரிய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் அமைதியாக!

**பாட்டருவி தமிழ்மணி க. உயிரவன்**
**தலைவர், கனடா தமிழாழி பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மார்த்தமான அஞ்சலிகள்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி.நாகசுந்தரி கார்த்திகேசு, திருமதி பூரணம் கனகரத்தினம், திருமதி.நாகரத்தினம் வேலாயுதபிள்ளை, திருமதி.கண்மணிப்பிள்ளை பாலசிங்கம், பாலசிங்கம் நாகநாதர் மற்றும் மகாதேவன் சுப்பிரமணியம் ஆகியோரின் அகால மரணம் நெடுந்தீவு மக்களுக்கு பெரும் துயரத்தையும், அதிர்ச் சியையும் ஏற்படுத்தியது. இத்துயரம் மீளமுடியாததும், மனதை வாட்டும் ஓர் நிகழ்வாகும்.

அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்கள் நெடுந்தீவு மாவிலித்துறை அருகாமையில் வாழ்ந்து வந்தார். அவரின் கணவர் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கையெய்தினார். தனியாக வாழ்ந்து வந்த அமரர் தன் நம்பிக்கையும், விடாமுயற்சியும் இவரை விட்டு விலகவில்லை. எல்லோரையும் அரவணைத்தும், உறவினர்களிடம் அன்பாகப் பழகும் தன்மை கொண்டவராகவும், நெடுந்தீவிற்கே உரித்தான விருந்தோம்பும் பண்பு கொண்டவராகவும் திகழ்ந்தார். அமரர் அவர்களின் மகன் செல்வன் கனடாவில் வசித்து வந்தாலும், நேரில் சென்றும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்வதுடன், தாய் மீது மிகவும் பாசம் கொண்டவ ராகவும் இருந்து வந்தார். தாயாரின் இழப்பை எவராலும் ஈடுசெய்ய முடியாது. கனடாவில் இசைக் கல்லூரி ஒன்றை நடாத்தி வருவதுடன், சிறந்த பாடகருமாவார்.

அமரர் பூரணம் கனகரத்தினம் அவர்கள் நீண்டகாலமாய் மன்னார் சிறுநாவற்குளத்தில் வசித்து வந்தார். நான் மன்னாரில் இருந்த பொழுது இவர்களிடம் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிகவும் அருமையான தம்பதிகள். நெடுந்தீவு என்று சொன்னால் போதும் அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து வழியனுப்புவார்கள். அமரரின் கணவர் பெயர் கனகரத்தினம். இருப்பினும் அவரை கனகர் என்றால் தான் எல்லோருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். மன்னாரில் பெரிய தொழில் அதிபராகவும், மிகவும் செல்வாக்குமிக்க மனிதராகவும் விளங்கினார். கடைசியாக அமரர் பூரணம் அவர்களை இந்த வருடம் மாவிலி வீட்டில் சந்தித்து 70, 80களில் மன்னாரில் சந்தித்த விடயங்களைப் பகிர்ந்து கொண்டார். எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் அவர் அடுத்த கிழமை உயிருடன் இல்லை. அமரரின் இழப்பை என்னால் நம்பமுடியவில்லை.

நாகரத்தினம் வேலாயுதப்பிள்ளை அவர்களை நான் மன்னாரில் உதவிப் பொலிஸ் காரியாலயத்தில் வேலை செய்யும் பொழுது திரு வேலாயுதபிள்ளையும் பொலிஸ் சார்ஜனாக பணிபுரிந்தார். அப்பொழுது எனக்கு அவருக்கு நட்பு ஏற்பட்டது. நான் நெடுந்தீவு என்று சொன்னேன். அதனால் அவரது குடும்பத்தாருடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. திருமதி. நாகரத்தினம் வேலாயுதம்பிள்ளை அவர்கள் எப்பொழுதும் சிரித்தமுகத்துடன் எல்லோரையும் வரவேற்கும் தன்மை கொண்டவராக வும், விருந்தோம்பும் பண்பு கொண்டவராகவும் பிறரை மதிக்கும் பண்பு கொண்டவராகவும் விளங்கினார். இவரது பிள்ளைகள், பேரப்பிள்ளை கள் அனைவரும் கல்வியறிவு பெற்று வளமுடன் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் பாலசிங்கம் நாகநாதர், அமரர் கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் இருவரையும் நெடுந்தீவில் வாழ்ந்த காலத்தில் இருந்து நன்கு தெரியும். அமரர் பாலசிங்கம் அவர்கள் இளமைக் காலத்திலே செல்வபுரத் (பாண்டியன்குளம்)திற்கு காணி கிடைத்துக் குடிபெயர்ந்தார். அங்கு விவசாயத்தில் ஈடுபட்டு சிறந்த விவசாயியாகவும், பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளராகவும் நீண்டகாலம் பணியாற்றினார். பொதுச் சங்கங்களில் இருந்து அந்தக் கிராமத்திற்கும், மக்களுக்கும் பல வழிகளிலும் உதவிகளைச் செய்து வந்தார். N.பாலசிங்கம் என்றால் வவுனிக்குளக் குடியேற்றத்திட்டத்தில் தெரியாதவர்கள் இல்லை எனலாம். சிறந்த குடும்பத் தலைவராகவும், உறவினர்களுக்கு நல்ல தோழனாக வும் விளங்கினார்.

அமரர் கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் வவுனிக்குளம் 2ஆம் யூனிற்றில் உள்ள நெசவு நிலையத்தில் ஆசிரியையாக நீண்ட காலம் பணியாற்றினார். ஆரம்ப காலத்தில் எனது பெரியஅண்ணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் இருந்துதான் வேலைக்குச் சென்றார். அப்பொழுதில் இருந்து நன்கு அவரைத் தெரியும். மிகவும் அமைதியானவர். எல்லோரிடமும் அன்பாக பழகும் தன்மை கொண்டவர். பிள்ளைகளுக்கு நல்ல அம்மா வாகவும், குடும்பத்தலைவியாகவும் இருந்து வழி நடாத்தினார்.

அமரர் மகாதேவன் சுப்பிரமணியம் அவர்களை நான் மகாவித்தியாலயத்தில் படித்த காலத்தில் இருந்தே தெரியும். இவர் எனது தாய்வழி நெருங்கிய உறவினராவார். நெடுந்தீவில் இருந்து குடிபெயர்ந்து பாண்டியன் குளத்தில் வசித்து வந்தார். பின்பு வவுனிக்குளம் - சிவபுரத் தில் அனலைதீவு பூர்வீகமாகக் கொண்ட பரமலிங்கம் தம்பதிகளின் மகளைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். பின்பு இந்தியாவிற்கு குடும்பத்துடன் சென்று சில வருடங்கள் இருந்து பின்னர் நோர்வே நாட்டிற்கு சென்றார். பிள்ளைகளுடன் அங்கு சில காலம் வாழ்ந்த பின், இலங்கைக்கே திரும்பி வந்து நெடுந்தீவில் வாழ்ந்து வந்தார். அப்பொழுது தான் இவருக்கு அகால மணரம் ஏற்பட்டது. நான் இந்த வருடம் நெடுந் தீவிற்குச் சென்ற பொழுது என்னைச் சந்தித்து உறவுமுறை சொல்லி என்னுடன் நீண்ட நேரம் உரையாடினார். கடைசியாக நான் மேற்கு ஊருக்கு போவதற்கு வானில் இடமும் பிடித்து, குடிப்பதற்கு தண்ணீர் போத்தலும் வாங்கித் தந்து வழி அனுப்பி வைத்தார். அதன் பின்பு சில நாட்களின் பின்பு அகாலமரணமானார் என்பதை அறிந்து மிகவும் வருத்தப்பட்டேன். இவரது இறுதிக்கிரிகைக்கு கிளிநொச்சி கணேசபுரம் சென்றேன். அங்கு அவர்களது பிள்ளைகள், சகோதரிகளைச் சந்தித்து துக்கத்தைப் பகிர்ந்து கொண்டேன்.

**நெடுந்தீவு சி.சு.நடராசா**
**தலைவர்**
**நெடுந்தீவுப் பாடசாலைகளின்**
**பழைய மாணவர் மன்றம் கனடா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தோம்பலின் அடையாளம் – செல்லம் அன்ரி

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு குறள் 86**

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் செல்லம் அன்ரி. விருந்தோம்பலுக்கு என்றே தன்னை அர்ப்பணித்தவர். செல்லும் விருந்தினரைப் போற்றி வரும் விருந்தினரை எதிர்பாத்திருப்பவர் நிச்சயமாக வானத்து தேவர்களுக்கு நல்ல விருந்தினராக அமைவார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நெடுந்தீவு மக்களின் பெருமையான விருந்தோம்பலுக்கு அடையாள மாக திகழ்ந்ததுடன் நெடுந்தீவு மண்ணில் கால்பதிக்கின்ற உறவுகள் எதுவும் செல்லம் அன்ரியின் அன்பில் திளைக்காமல் செல்வதில்லை. அதற்கேற்றாற்போல் அவரது வதிவிடமும் அமைந்திருப்பது வரப்பிர சாதமே.

செல்லம் அன்ரியின் எதிர்பாராத திடீர் இழப்பு ஒருவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. ஒரே இரவில் அவருடன் இணைந்து சகோதர உறவுகள் இவ் உலகை விட்டுப் பிரிந்தமையானது குடும்பத்தவர் களுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்கே அதிர்ச்சியினையும், ஆத்திரத் தினையும் உண்டு பண்ணியுள்ளது.

செல்லம் அன்ரியினதும், அவரது உறவுகளினதும் இழப்பினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்ப உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதா பங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரதும் உறவுகளதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

**ம.பிரதீபன்**
**மேலதிக மாவட்டச் செயலாளர் / மேலதிக அரசாங்க அதிபர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் யோகு (மகன்)

அம்மா இளமையில்
உனை இழந்தேன்
கலங்கி நான் வாடுகின்றேன்
உண் இழப்பு என்றும்
என்னோடு சேர்ந்து விடும்
என்று ஆசை கொண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஔவையார் அருளியது

# விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன்முடியுந்
திரண்ட முப் புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்து திரம்இது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்

தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தனி இயக்கமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்மமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## நூல்

நமச்சிவாய வா(அ)ழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகமமாகினின்று அண்ணிப்பான்தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற வித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் கா(அ)ட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறியைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசைவொடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லேகரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருள்வாய்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கந்தர் சஷ்டி கவசம்

திருச்சிற்றம்பலம்

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண் டலமும்
ஆறிரு திண்புயத் (து)தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன் மணிபூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாழ் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ல்நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக ல்தன்னில் வச்சிரவேல் காக்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிரு ள்தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க த்தாக்க தடையறத் தாக்க
பார்க்க ப்பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய ப்பாவையும் ஒட்டிய ச்செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை ச்சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசய்ங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேல வனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ள்நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி ல்அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட ன்இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதும் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி க்கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்



"எதனைக் கொண்டு வந்தோம் எதனைக் கொண்டு செல்வதற்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

# சகலகலாவல்லி மாலை



**உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்**

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகம் ஏழும்மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)
ஆகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! 01

**நாற்கவி பாட நல்லருள் தருவாய்**

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமகள் அருளிற் குளிக்க விரும்புதல்

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! 03

## கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்தா வினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!. 04

## நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்

பஞ்சப்(பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததென்னே?
நெடுந் தாட் கமலத் (து)
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே! 05




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்

பண்ணும் பரதமும் கல்வியும்
        தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
        காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
        கனலும் வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
        சகல கலாவல்லியே! 06

### பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற்
        பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
        காய், உள்ளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
        அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
        சகல கலாவல்லியே! 07

### சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமும் அவதானமும்
        மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந்து அடிமைகொள்
        வாய், நளி னாசனம் சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
        மும்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
        சகல கலாவல்லியே! 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! 09

### மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பன்கண் டளவிற் பணியச் செய்
வாய், படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே! 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




அமரர்களைக் குறிக்கும் *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இறைவன் காலடி சேர்ந்த
**அமரர் திருமதி நாகசுந்தரி கார்த்திகேசு**
எங்கள் குடும்பக் குலவிளக்கின் பிரிவுச் செய்தி
கேட்டவுடன் வந்து துயரங்களில் பங்கேற்று
பலவழிகளிலும் பக்க பலமாக இருந்து கருமம்
ஆற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி
வைத்தவர்களுக்கும், இல்லத்தில் நேரில் தங்கள்
அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் சகல
வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள. நலன்
விரும்பிகள் நண்பர்களுக்கும் மேலும் இத்தினத்தில்
கலந்து கொண்ட சகலருக்கும் எமது இதயம் கனிந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Print@Evergreen, Jaffna. 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org